Registered as a Newspaper பக்கங்கள்: 6

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 11 26 - 12 - 94 திங்கட்கிழமை ஓசை 311

26 -12- 1994

## கரும்புலிகள் நினைவுநாள் போட்டியில் வெற்றிபெற்றோருக்குநாளை பரிசளிப்பு

கரும்புலிகள் நினைவு நாள் போட்டிகளின் பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் கலை, பண்பாட்டுக் கழக யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி கலைமணி தலைமையில் நடைபெறும். மங்கள விளக்கேற்றி விழாவினை ஆரம்பித்து வைப்பவர்கடற் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் தாயார் திருமதி துரைசிங்கம் அவர்கள். தொடர்ந்து மௌனவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து நிகழ்வுகளுடன் வரவேற்புரையை யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. ஆ. குமணன் நிகழ்த்துவார். தொடர்ந்து தலைமை யுரை நடைபெறும். யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி, யாழ். மாவட்ட அரசியல் துறை மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி, திரு. ச. காந்திதாசன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவார்கள் போட்டிகளில் வெற்றியீட்டிய கலைக்குழுவுக்கான பரிசி (6ஆம்பக்கம்பார்க்க)

## தனித்துவமான ஆற்றலால் சாதனை புரிகிறார் பிரபாகரன்

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தன் போர் தந்திரங்களினாலும் தனித்துவ அணுகு முறையினாலும் எல்லாவற்றையும் சாதித்து வருகிறார் என சண்டே ஐலண்டின் அரசியல் விமர்சகர் தராகி குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தை மூலம் எல்லா காரியங்களையும் இரண்டொரு தினங்களில் அடைவது இலகுவானதல்ல. தொழில்நுட்பம், இராணுவம், பொதுமக்கள் ஆகிய தரப்புகளையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் அரசு பிரச்சினையை தீர்க்கலாம் என எதிர்பார்க்கின்றனர் அதேநேரம் இராணுவமும் 1990 முதல் நடைபெறும் போரினால் ஏற்பட்ட விளை (6ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மடுமாதா பிரதேசத்தை சமாதான பிராந்தியமாக்குக

### ஜனாதிபதி சந்திரிகாவிடம் மன்னார் ஆயர் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மடுமாதா யாத்திரிகர் பிரதேசத்தை சமாதானப் பிரதேசமாக பிரகடனப் படுத்துமாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு. இராயப்பு யோசப் ஆண்டகை ஜனாதிபதி சந்திரிகாவை கேட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பு சென்றஇவர் ஜனாதிபதி அலுவலகம் சென்று இது தொடர்பான மனுவை ஜனாதிபதியிடம் கையளித்தார். தள்ளாடி - மன்னார்வீதி திறக்கப்பட வேண்டும். மன்னாருககு பொருள்கள் எடுத்துச் செல்ல விதிக்கப்பட்ட தடை 'நீக்கப்பட வேண்டும் என்றும் ஆயர் அம்மனுவில் கேட்டுள்ளார்.

கடற்படையினரால் இப்போது பொதுமக்கள் தாக்கப் படுகின்றனர். மீன்பிடி கடல் எல்லையை இன்னும்ஒருமைல் நீடிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# போர்நிறுத்தம் குறித்துப் பேச்சு நடத்த அரசதரப்புக்குழு விரைவில் யாழ். செல்லும்

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்காக அரசாங்க தரப்பு தூதுக்குழுவொன்று விரைவில் யாழ்ப்பாணம் செல்லவுளளது. இக்குழு இருவாரகால தாக்குதல் நிறுத்தம் குறித்தும், வடபகுதிக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள், ஆனையிறவுப் பாதை திறக்கும் சாத்தியம் என்பனகுறித்தும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும், முன்னர் யாழ்ப்பாணம் சென்ற குழு ... வார் என்றும், ஆனால் இவ் அதிகாரி யார் என்பது குறி ... அவர்கள்முன் சமர்ப்பிப்பதற்கான யோசனைகளை தற் ... பேச்சு நடத்துவதற்காக அரசாங்க தரப்புக்குழு யாழ்ப் ...

## வாகரையில் தேடுதல் நடத்த வந்த ராணுவத்தின் மீதே கண்ணிவெடித்தாக்கு

(யாழ்ப்பாணம்)

வாகரை பிராந்திய காட்டுப் பகுதிக்குள் தேடுதல் நடத்தும் நோக்கத்துடன் மூன்று பஸ், ஒரு கெண்டர், ஒரு டிறக் ஆகிய வாகனங்களில் வந்த இராணுவத்தினரின் பஸ் வண்டி ஒன்றின் மீதே விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் கண்ணி வெடித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத் தாக்குதலில் 5 இராணுவத்தினர் பலியாகியதுடன் 20 இராணுவத்தினர் படுகாயம் அடைந்தமை தெரிந்ததே. பணிவிச்சங்கேணி இராணுவமுகாமில் இருந்து கஜூவத்த முகாமிற்கு வந்து அங்கிருந்து வாகரைக் காட்டுப் பிராந்திபத்துக்குள் இவர்கள் தேடுதல் நடத்த முயன்ற போது இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அவர் மேலும், முன்னர் யாழ்ப்பாணம் சென்ற குழுவினரே மீண்டும் யாழ்ப்பாணம் செல்வர் என்றும் மோதல் தவிர்ப்பு தொடர்பாக புலிகளுடன் புரிந்துணர்வை எளிதான முறையில் ஏற்படுத்திக் கொள்வதற்காக படை உயரதிகாரி ஒருவரும் இத்தூதுக்குழுவில் இடம் பெறுவார் என்றும், ஆனால் இவ் அதிகாரி யார் என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் கூறினார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படவுள்ள பேச்சுவார்த்தைகளின் போது அவர்களுமுன் சமர்ப்பிப்பதற்கான யோசனைகளை தற்போது அரசாங்கம் தயாரித்து வருகின்றது. இத் தீர்வு யோசனை தொடர்பான ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் எனவும் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காக அரசாங்க தரப்புக்குழு யாழ்ப்பாணம் செல்வது தாமதமாகின்ற போதும் அவர்களுடன் கடிதப் பரிமாற்றங்கள் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் தவிர்ப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வது தொடர்பாக விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். முதலில் இரு வார காலத்திற்கு மோதல் தவிர்ப்பு நிலை அமுல்படுத்தப்படும். பின்னர் அது தொடர்ந்து நீடிக்கப்படும்.

வட பகுதிக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் மற்

[6ஆம் பக்கம் பார்க்க]

# ஜனாதிபதி ஆட்சி யாப்பு முறையை பாதுகாக்க ஜே. ஆர். முயற்சி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா ஐ. தே. க எம்பிகளுக்கு தமது ஆட்சியின் போது கொண்டு வரப்பட்ட 78 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆட்சி முறையை தற்போதைய அரசு நீக்க முயன்றால் யாப்பு மூலம் எப்படி செயலிழக்கச் செய்யலாம் என போதனைகள் நடாத்தி வருகிறார் என சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் ரணிலுக்கே ஜனாதிபதி முறை ஒழிக்க அரசு எடுக்கும் முயற்சியை எவ்வாறு அரசியலமைப்பு ரீதியில் எதிர்த்து தோற்கடிப்பது என ஜே. ஆர் ஜெயவர்த்தனா விளக்கிவருகிறாராம்.

# ராணுவ அதிகாரி உள்ளிட்ட அரச குழு 29 ஆம் திகதி யாழ். செல்கிறது

## சண்டே ஐலண்ட் தகவல்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை புதுவருடத்திற்கு முன்பாக மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளை அரசு மேற்கொள்வது என்றும் டிசம்பர் 29 -ம் திகதி மூத்த இராணுவ அதிகாரி அடங்கிய குழு யாழ்ப்பாணம் செல்லும் என்றும் மூத்த அமைச்சர் ஒருவரை மேற்கோள் காட்டி சண்டே ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அங்கு நடைபெறும் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் கேட்டுக் கொண்டபடி ஓரளவு போர் நிறுத்தம் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன என்றும் சண்டே ஐலண்ட் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் சர்வ

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஊழல் குற்றச்சாட்டு லயனல் மறுப்பு

(கொழும்பு)

தான் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக பதவி வகித்த போது ஊழல் மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டுவோர் அக்குற்றச்சாட்டுக்களை புதிய அரசினால் உருவாக்கப்பட்ட ஊழல் மோசடி விசாரணைக்குழுமுன் சமர்ப்பிக்கும்படி லயனல் பெர்னான்டோ கூறியுள்ளார்.

ஆளுநராக பதவி ஏற்ற பின் அம்மாகாண நிர்வாக அமைப்பை முழுமையாக ஆராய்ந்தேன் இதனையடுத்து சில மாற்றங்களுக்காக செயலாளர் சிலரை இடம் மாற்றினேன். நிர்வாக அமைப்பைக் கட்டி எழுப்பும் வகையில் இவற்றை நானே விரும்பிச் செய்தேன். வடக்கு - கிழக்கு ஆசிரியர் தெரிவு புறக்கணிக்கப்பட்டிருந்ததை நானும் உணர்ந்தேன்.

என் மீதான குற்றச்சாட்டுக்களை சுமத்த முன் அது பற்றி என்னுடன் தொடர்பு கொள்ளாமையையிட்டு வருந்துகிறேன். ஊழல் மோசடி தொடர்பாக என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை புதிய அரசினால் உருவாக்கப்பட்டுள்ள ஊழல் மோசடி விசாரணைக்குழு முன் சமர்ப்பிக்கும்படி நான் யோசனை கூறுகிறேன் என லயனல் பெர்னான்டோ குறிப்பிட்டார்.

நான்கு கோரிக்கைகளை முன்வைத்து

# செஞ்சிலுவைதொண்டர்கள் 4 மணி நேர போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் செஞ்சிலுவை சங்க தொண்டர்கள் நேற்று செய்த வேலை நிறுத்தம் நான்கு மணி நேரத்தின் பின் முடிவுக்கு வந்தது.

தமதுசக ஊழியர்களிற்கு எதிராக செஞ்சிலுவைச் சங்க தலைமையகம் செய்துவரும் கெடுபிடிகளை நீக்குவது தொடர்பாக நான்கு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று காலை 7.30 மணியில் இருந்து வைத்தியசாலைக்கு வெளியில் நின்று வேலை நிறுத்தத்தை இவர்கள் ஆரம்பித்தனர்.

காரணமின்றி வேலையில் இருந்து இடை நிறுத்தம் செய்த ஊழியரான ஜி ஞானசீலனை மீண்டும் வேலைக்கு அமர்த்தல்,

(6ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் யுத்தம் இருக்கும் வரை ஏனையவை பற்றிச் சிந்திக்க முடியாது

## பிரதி அமைச்சர் திசாநாயக்கா

(கொழும்பு)

வடக்கில் யுத்தம் இருக்கும் வரை நாம் ஏனையவை பற்றி சிந்திக்க முடியாது. இன்று தேசிய வருமானத்தில் கால் பங்கை போர் விழுங்குகிறது என இளைஞர் விவகாரத் துறை பிரதி அமைச்சர் திசாநாயக்கா பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த தேர்தலில் எமது கட்சிக்கு எதிராக இனவாதம் எழுப்பப்பட்டது. அதிகாரத்தில் இருப்பதற்காக சிங்கள-தமிழ் அரசியல்வாதிகள் வரலாறு முழுவதும் இனவாதம் கிளப்பினர். எமது கட்சியினரும் இதைச் செய்தனர். ஐ. தே. கவும், ஜே. வி. பியும் இதைச் செய்தனர்.

வடக்கில் நடைபெறும் யுத்தத்திற்கு நாம் அனைவரும் காரணம். ஐ. தே. க. 17 வருட காலமாக ஆட்சியில் இருப்பதற்காக போரை நடத்தியது. சிலருக்கு போர் தொடர்வது விருப்பமாக உள்ளது.

கேள்வி: இன்றைய நிலைமைகளை மாற்ற எடு

[6ஆம் பக்கம் பார்க்க]

# தாதி உத்தியோகத்தர்கள் மேலதிக படி தாமதம்

(யாழ்ப்பாணம்)

தாதி உத்தியோகத்தர்களிற்கு கடந்த மூன்று மாதங்களாக வழங்கப்படாதிருந்த மேலதிக நேரக் கொடுப்பனவு நேற்றைய நத்தார் பண்டிகைக்காவது வழங்கப்படாததையிட்டு யாழ். போதனா வைத்தியசாலை தாதிகள் கவலை அடைந்துள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மேலதிக நேரக் கொடுப்பனவு கடந்த மூன்று மாதங்களாக வழங்கப்படவில்லை.

இவற்றை வழங்குமாறு கடந்த மாதம் தாதி உத்தியோகத்தர் வைத்தியசாலை கணக்காளர் உட்பட நிர்வாகத்தின

(6ஆம் பக்கம் பார்க்க)

# தீக்குச்சியில் வெடி செய்த மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்மஸ் விளையாட்டாக தீக்குச்சி மருந்தில் வெடி செய்த மூன்று சிறுவர்கள் அது வெடித்ததில் கண்ணிலும் கைகளிலும் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சுண்டிக்குழி பகுதியைச் சேர்ந்த ஆர். கோல்டன் (வயது 14), எஸ். சுதன் (வயது 18), ஆர். ஜெனோ (வயது 16) ஆகிய மூவருமே காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவர்.

இவர்கள் மூவரும் மூன்று

[6ஆம் பக்கம் பார்க்க]

# ஆஸ்பத்திரி விடுதிகளில் நுளம்புகளால் தொல்லை

யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள நோயாளர் சிகிச்சைக் களங்களில் நுளம்புத்தொல்லை அதிகரித்துள்ளது இங்கு பகலில் மட்டுமல்ல இரவு வேளைகளிலும் இலையான்களின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதன் காரணமாக சிகிச்சைக் களங்களில் (வார்ட்) சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் பெரும் துன்பத்துக்குள்ளாகியுள்ளனர்.

மேலும் இந்த சிகிச்சைக் களங்களில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு நுளம்புகளினாலும், இலையான்களாலும், வேறு கொடிய நோய்கள் தொற்றும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

நுளம்பு, இலையான்களை அழிப்பதற்காக வைத்தியசாலை நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருப்பதாக அறியவருகின்றது. [தி]

## வரி விளம்பரம்

**தாதி பயிலுனர் தேவை**
தொடர்பு: லிங்கம் சிகிச்சை நிலையம் குளப்பிட்டி - ஆனைக் கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். நேரம்:- காலை:- 6 - 8 மணிவரை மாலை:- 3 - 6 மணிவரை
(10491)


## சைக்கிள்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சென்ற மாதம் (நவம்பர்) யாழ்ப்பாணத்தில் திருட்டுப் போன மூன்று சைக்கிள்கள் தமிழீழ காவல் துறையினால் மீட்கப்பட்டுள்ளன.

நவம்பர் 7-ம் திகதி தட்டா தெரு சந்தியில் திருட்டுப் போன ஒரு சைக்கிளும், 17-ம் திகதி கல்வியங்காட்டில் திருட்டுப்போன இரண்டு சைக்கிள்களுமே மீட்கப்பட்டன,

இவற்றில் கல்வியங்காட்டில் திருட்டுப்போன இருசைக்கிள்களும் அக்கு வேறு ஆணி வேறாக பாகங்கள் பிரிக்கப்பட்ட நிலையிலேயே மீட்கப்பட்டதாகவும்,

இத் திருட்டுக்களில் சம்பந்தப்பட்ட இரு நபர்கள் மீதான விசாரணைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் விசாரணை முடிவுற்றதும் சைக்கிள்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் யாழ். காவல் நிலையத்தினர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர், (22)

## பொருட்கள் திருட்டு

மானிப்பாய் கூளாவடி பல நோக்கு கூட்டுறவு சங்கக் கிளைக் கடையில் 5000ரூபாவுக்கு அதிகமான பெறுமதியுள்ள பொருட்கள் அண்மையில் திருடப்பட்டுள்ளன.

இரவு வேளையில் கடையின் மேற்கூரையை பிரித்து உள் இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பால்மாவகைகள், சைக்கிள் ரயர்கள், சவர்க்காரங்கள் உள்ளிட்ட பல பெறுமதியுள்ள பொருட்களை திருடிச் சென்றுவிட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. (24)

## மட்டக்களப்புக்கான நிதி திறைசேரிக்கு திரும்பலாம்?

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின். அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட சுமார் பத்துக்கோடி ரூபா திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாக நம்பகரமாகத் தெரியவருகிறது.

இம்மாவட்டத்தின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் போன்ற பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட இந்நிதி திறைசேரிக்கு மீளச் செல்லும் நிலை உருவாகியிருப்பதாகக் கூறப்படுகிறது. பன்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழும், புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டங்களின் கீழும், பிரதேச செயலக உதவித் திட்டத்தின் கீழும் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் பி. எல் 40 திட்டம் என்பன இந் நிதி ஒதுக்கீட்டை செய்து இருந்தன. மொத்தமாக 732 திட்டங்களுக்கு 210 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால் கடந்த காலங்களில் 105 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. ஏறக்குறைய பத்துக் கோடியே இருபது லட்சம் ரூபா எஞ்சியிருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலை காரணமாக நிவாரணப்பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. 94-ம் ஆண்டு முடிவடைய இன்னும் சில தினங்கள் மட்டுமே இருக்கின்ற நிலையில், இதற்கான திட்டங்களைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறது. இந்நிலையில் இந்த நிதி திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட இருப்பது தவிர்க்க முடியாததாகிறது எனவும் கூறப்படுகிறது.

## மட்டக்களப்பு பகுதியில் அடிக்கடி சுற்றிவளைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரப்பந்தீவு மற்றும் வாழைச்சேனை பகுதிகள் பாதுகாப்பு படையினரால் வாரத்திற்கு இருமுறை சுற்றி வளைப்பு. தேடுதலுக்கு உள்ளாக்கப்படுகிறது.

இச் சுற்றிவளைப்புக்களின் போது பெண்கள் வேண்டாத இம்சைகளுக்கு உள்ளாக்கப்படுவதாகவும், மழை வெள்ளத்தில் தள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மாலை ஆறு மணிக்குப் பின்னர் வெளியே நடமாடக்கூடாதென மக்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும், இராணுவ கண்காணிப்புக்கு உட்படாத பகுதிகளில் மீன் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் கூறப்படுகிறது.

## மக்களின் அபிலாசைகளை படையினர்நிறைவேற்றட்டும்

### மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர்

(மட்டக்களப்பு)

பாதுகாப்பு படையினர் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றி அவர்கள் விரும்பும் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் செயற்பட வேண்டும். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே கூறியுள்ளார்.

ஏறாவூரில் பொலிசார் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், சமாதானத்தை விரும்பியே மக்கள் தற்போதைய ஜனாதிபதியை தெரிவு செய்துள்ளனர். எனவே தாயகபூமியில் யுத்தம் நடைபெறுவதை அவர்கள் விரும்பமாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## மட்டு. இசை நடனக் கல்லூரி பல்கலை.உடன் இணையும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் இசை, நடனக்கல்லூரி கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதி கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரானவினால் வழங்கப்படவுள்ளது. மட்டக்களப்புக்கு அண்மையில் விஜயம் செய்தபோது அமைச்சர் இதற்கு கொள்கையளவில் இணக்கம் தெரிவித்ததுடன், விரைவில் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிப்பதாகவும் குறிப்பிட்டார்.

## பண்டிகைகளை முன்னிட்டு பாதுகாப்பு அதிகரிப்பு

நத்தார் மற்றும் புதுவருடப் பண்டிகைகளை முன்னிட்டு கொழும்பு நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலதிக பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும், பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

விடுதி வசதி கோரி ஆர்ப்பாட்டம் நடத்திய பல்கலைக்கழக மாணவர்கள் ஜனாதிபதி செயலக முன்றலில் திடீரென ஊர்வலம் நடத்தியதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டமைக்கான ஒரு காரணமாகும் எனவும் கூறப்படுகிறது.

பண்டிகைக் காலத்தில் இடம் பெறக்கூடிய அனைத்து அசம்பாவிதங்களையும் கட்டுப்படுத்தும் விதமாக இப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதாகவும், பிக்பொக்கட் பேர்வழிகள் தொடர்பாக பொலிசார் உசார் படுத்தப்பட்டிருப்பதாகவும் குற்றப்புலனாய்வு பணியகத்தை சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர்கூறியுள்ளார். அதேவேளை சந்தேகத்திற்கிடமான பேர்வழிகள், முன்னாள் குற்றவாளிகள், மற்றும் குழப்பங்களைத் தூண்டுவோர் தொடர்பாகவும் பொலிசார் விசேட கண்காணிப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## அடைமழை காரணமாக 65வீதவேளாண்மைபாதிப்பு

(மட்டக்களப்பு)

கடந்த இரு மாதங்களுக்கும் மேலாகப் பெய்துவரும் அடை மழையின் காரணமாக 65 சதவீதத்திற்கும் அதிகமான வேளாண்மைகள் அழிந்து இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சுமார் 35,000 ஹெக்டயர் விவசாயக் காணியில் இம் முறை செய்கை மேற் கொள்ளப்பட்ட போதும் சுமார் 28,000 ஹெக்டயர் விவசாய செய்கை பாதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகிறது.

## ஆலையடிவேம்பு பகுதியில் படையினர் சுற்றிவளைப்பு

ஆலையடிவேம்பு பிரதேச செயலர் பிரிவில் இருக்கும் பனங்காடு மற்றும் சின்னப் பனங்காடுகிராமங்கள் விசேட அதிரடிப்படையினரால் கடந்த ஞாயிறன்று சுற்றிவளைக்கப்பட்டது. நீண்ட நேரம் தேடுதல் வேட்டைகளும் நடத்தப்பட்டது.

இக்கிராமத்தில் வாழும் அனைவரையும் பொது இடமொன்றுக்கு அழைத்துச் சென்றதன் பின்னர், பனங்காடு கிராம முகாமுக்கு கூட்டிச் சென்று அனைவரதும் பெயர், பிறந்த திகதி போன்ற விபரங்களைப் பதிவு செய்துள்ளனர்.

## குண்டும் குழியும் நிறைந்து பிரதான வீதி சீர்கேடு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதிகளில் பிரதான வீதிகளில் மிகவும் கிடங்குகள் காணப்படுவதால் பாதசாரிகள், குறிப்பாக விறகு வியாபாரிகள் மிகவும் சிரமப்படுகின்றனர்,

அண்மையில் பெய்த மழையினால் முன்னரே திருத்தப்படாத நிலையில் இருந்த கிடங்குகள் தற்போது பாரிய குழிகளாககாணப்படுகின்றன. இதனால் விறகு வியாபாரிகள் விறகுகளை கட்டி சைக்கிளில் பயணத்தினை மேற்கொள்ள முடியாமல் வீதிகளில் விறகுடன் இடையிடை விழுந்து விழுந்து எழும்பி செல்லும் மிகவும்பரிதாபமானநிலைமையாக காணப்படுகின்றது. குறிப்பாக எழுதுமட்டுவாழுக்கும் பளைக்கும் இடையிலும் இதைவிட கொடிகாமம்-புத்தூர் சந்திக்கும் இடையில் மிகவும் மோசமான பள்ளம் திட்டிகளும் சாவகச்சேரி நகர், மீசாலை, நுணாவில், கைதடி, செம்மணி போன்ற இடங்களில் பிரயாணம் செய்யமுடியாமல் விறகு ஓட்டிகள் திண்டாட வேண்டியுள்ளது. (86)

## நினைவு கூருகின்றோம்...

### 26.12.1994

1985-ம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய,

★ **விஜயன்** (ஜோசப் இமானுவேல்- சம்மாந்துறை -அம்பாறை )

★ **இராசா** ( ரெட்ணம் அல்போன்ஸ் - அம்பாறை )

★ **பீலிக்ஸ்** ( சுபாஜி பீலிக்ஸ்டயஸ் - அம்பாறை )

1990-ம் ஆண்டு வவுனியா- ஓமந்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். ரமணன்**( யோசப் ஜெயரத்தினம் - புளியம் பொக்கணை- கிளிநொச்சி )

1992-ம் ஆண்டு வவுனியா - செட்டிகுளம் முயல் குத்திப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் நிருபன்** (இராசையா விஜயகுமார் -சாந்த சோலை - வவுனியா )

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-11011)

# 7-ம் ஆண்டு நினைவு நாள் விழா

உ



தமிழ் மரபிசை: என். கே. பத்மநாதன்
கே. ஆர். சுந்தரமூர்த்தி
வி. கே. பஞ்சமூர்த்தி
எஸ். எஸ். சிதம்பரநாதன்
ஆர். கேதீஸ்வரன்

என். கே. வீராச்சாமி
கே. நித்தியானந்தன்
கே . சிவகுமார்
ஏ. உதயசங்கர்
என். ஆர். எஸ். இரவீந்திரன்



புரட்சித் தலைவர்
மக்கள் திலகம்

# அமரர் டாக்டர்

# எம். ஜி. ஆர்.

காலம்: 26.12.1994 திங்கள்

இடம்: மஞ்சவனப்பதி முருகன் ஆலய திறந்தவெளி அரங்கு
கே. கே. எஸ். வீதி, கொக்குவில்

தலைமை: திரு. பொன். மதிமுகராசா சமாதான நீதிவான் அவர்கள்
(தலைவர், அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவை)

26.12.94 திங்கள்

## நினைவு தின விழா நிகழ்ச்சிகள்

மாலை 4- மணி

மங்கள விளக்கேற்றல்; திரு. ஈ. சரவணபவான் அவர்கள்
(நிர்வாக முகாமையாளர், உதயன் பத்திரிகை)
வைத்திய கலாநிதி எஸ். பி. ஆர். சீர்மாறன்

மலரஞ்சலி செலுத்துதல்: திரு. க. திருநாவுக்கரசு அவர்கள்
(அமைப்பாளர், சர்வோதயம், வட இலங்கை)
திரு. ப சிவலோகநாதன் (துணைத்தலைவர், இலங்கை இந்து இளைஞர் பேரவை)
திரு ஆ. ஜீவரத்தினம் அவர்கள். (ஆறுமுகம் சிற்பாலயம் திருநெல்வேலி)

மலர் மாலை சூட்டுதல்: திரு. ச. அற்புததேவராசா

தமிழ்த்தாய் வாழ்த்து: திரு பொன். சுந்தரலிங்கம் அவர்கள் (தலைவர் இளங்கலைஞர் மன்றம்)
திரு நா. வீ. மு. நவரத்தினம் அவர்கள்

மங்கள இசை: திரு எம். ரி. பாலகிருஷ்ணன் (எம்.ஜி. ஆர். பேரவை ஆஸ்தான கலைஞன்)

ஆர். கேதீஸ்வரன் என். ஆர். எஸ். இரவீந்திரன்

வரவேற்புரை: திரு. செ. இலகுநாதன், பேரவை உறுப்பினர்

மாலை சூட்டுதல்: இ. மகேந்திரன் (அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)

ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகள்
அருட்திரு. அ. ஜெயக்குமார் (செயலாளர், தென்னிந்திய திருச்சபை)

முதன்மைப் பேருரை: திரு செ. பத்மநாதன் (திட்டப்பணிப்பாளர்)
திருமதி ப. திலகநாயகம் (மேலதிக அரச அதிபர்)

நினைவுப் பேருரை: கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) அவர்கள் (பிரதேசச்செயலாளர்)

சிறப்புரை: திரு புதுவை இரத்தினதுரை அவர்கள் (பொறுப்பாளர், கலை பண்பாட்டுக் கழகம், தமிழீழம்)
திரு. கே. சி. வேலாயுதம் அவர்கள் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
திரு. சிவமகாலிங்கம் B. A. அவர்கள்
திரு. இரா. சுந்தரலிங்கம் B, A. B. Sc அவர்கள் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்)
திரு. சுந்தரம் டிவகலாலா B A (உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)
திருமதி க. சிவசிதம்பரம் (மேலதிக அரச அதிபர் /பிரதேச செயலர் நல்லூர்)
திரு. அ. மு. அருணாசலம் (அதிபர், மானிப்பாய் மெமோறியல் கல்லூரி)

நன்றியுரை: செல்வி ம. விஜயமதி

விருது வழங்கல்: 10 கலைஞர்களுக்கு எம்.ஜி.ஆர், விருது

கவியரங்கு: தமிழினத்துக்கு எம்.ஜி.ஆர். ஓர் ஒளிவிளக்கு

தலைமை: இயல் இசை வாருதி பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள்
கவிஞர் திரு.செ. பரமநாதி — திரு சோ. பத்மநாதன்
திரு.எஸ். பி. அருளானந்தம் — செல்வி ம. கஸ்தூரிமதி
திரு.நாவண்ணன்

புரட்சிப்பாடலில் புதுக்கவிதை திரு த. கோவிந்தசாமி

பட்டிமன்றம்-புரட்சித்தலைவரின் திரைக்காவியங்களில் தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்பது யார் பாடல்களில்?

நடுவர்: புலவர் திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் (மாவட்ட நீதிபதி, மன்னார்)

| கவிஞர் பட்டுக்கோட்டை | கவிஞர் கண்ணதாசன் |
|---|---|
| திரு. கனக. நாகேஸ்வரன் | திரு. பொன். கணேசமூர்த்தி |
| திரு. த. சிவகுமாரன் | திரு. இரா. செல்வவடிவேல் |
| திரு. செ. சத்தியமூர்த்தி | திரு. எஸ். கணேசலிங்கம் |
| திரு. பசு. ஸ்ரீபதி | திரு. க. கணேசலிங்கம் |

கவிஞர் வாலி

| | |
|---|---|
| திரு. அ. குமாரவேல் | திரு.எம். எஸ். தயாளன் |
| திரு. ஆறு. திருமுருகன் | திரு. எம். எஸ். முத்துலிங்கம் |

கரகாட்டம்: செல்வன் சி. இராஜபேட் குழுவினர், செல்வன் இ. லெவள்

நாடகம்: ஸ்ரீ தேவி எஸ். எஸ். சர்மா வில்லிசை கலைஞர் எம். தைரியநாதன் இணைந்து வழங்கும்
**போர் களக் காண்டம்**

நாடகம்: கோண்டாவில் கற்பகா குழுவினர் வழங்கும் சிவநாதனின் நெறியாள்கையில்
K.S. தர்மராசாவின்
**''தூண்கள்''**

நடனம்: இலங்கை வேந்தன் குழுவினர்
மெல்லிசை: அருணா மெல்லிசைக் குழுவினர்


அமரர் எம்.ஜி.ஆர். கண்ட கனவுகள் நனவாக பிரார்த்திக்கிறோம்

**திருமாட்டி பிடவையகம்**
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(சி-11012)

அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில்

# இலங்கைத் தமிழர்களில் பலர் தமிழகத்தில் நீண்ட காலம் சிறை

## இரா. சிவலிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்கள் பலர் எதுவித காரணங்களுமின்றி இந்தியசிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். விசேட முகாம்கள் என அழைக்கப்படும் இச்சிறைகளில் இயற்கை கழிப்புக்கு கூட வசதிகள் இல்லை. தனித்தனி அறைகளில் ஒவ்வொருவரும் தனித்தனி சங்கிலிகளால் கட்டப்பட்டுள்ளனர். ஒருவர் மற்றுமொருவருடன் தொடர்பு கொள்வதற்கு கூட வழியில்லை. உணவும் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை. இத்தகைய பல சிரமங்கள் நிறைந்த சிறைக்கூடங்கள் உலகில் வேறு எந்தப் பகுதிகளிலும் இல்லை.

இவ்வாறு அண்மையில் இலங்கை வந்துள்ள இரா. சிவலிங்கம்தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டின் தாயகம் திரும்பியோர் தேசியப் பேரவை, மலையக மக்கள் மறுவாழ்வு இயக்கம். என்பவற்றின் தலைவரும், அட்டன் கைலன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபருமான இவர் தமிழகத்தில் நீண்ட நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மலை நாட்டு எழுத்தாளர் மன்றத்தின் ஏற்பாட்டில் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறுகையில், ராஜீவ் காந்தியின் மரணத்திற்குப்பின்னர் இலங்கை தமிழர்கள் மீது தமிழகத்தில் வெறுப்புணர்வு காணப்படுகிறது- இச்சம்பவத்திற்கு பின்னர் இலங்கையர்கள் அனைவரும் பொலிசாரிடம் பதிவுசெய்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டது. தாயகம் திரும்பிய மலையக மக்கள் பதிவு செய்யவேண்டுமா? என்றகேள்வியைக் கேட்டு எம்மை நாம் பதிவு செய்ய மறுத்தோம். இதனால் பொலிசார் என்னைக் கைது செய்தனர்.

சிறையில் நிலவும் கொடுமைகளை எதிர்த்து நடவடிக்கையில் ஈடுபட்டோம். எல்லோரையும் ஒன்றிணைத்து உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள திட்டமிட்டேன். இதற்காக கடிதமொன்றின் மூலமாக அங்கிருந்த எல்லோருடனும் தொடர்பு கொண்டேன். நான் எழுதிய இக்கடிதம் சிறை அதிகாரி ஒருவரினால் கைப்பற்றப்பட்டது. அதனை எடுத்துக்கொண்டுவந்த அதிகாரி என்னைப் பார்த்து நீர் தானா சிவலிங்கம் எனக் கேட்டார். ஆம் எனக் கூறினேன். ராஜீவ்காந்தியின் மரணத்திற்கு பின் இங்கு எவருமே இலங்கை மக்கள் மீது அனுதாபம் காட்டுவதில்லை. இங்கு உங்களுக்கு வழங்கப்படும் உணவு கூட நிறுத்தப்படலாம் என்று அவர் எச்சரித்தார் எனவும் குறிப்பிட்டார்.

# சிறிலங்கா ராணுவத்தில் 13 மேஜர் ஜெனரல்கள்

சிறிலங்கா இராணுவத்தில் தற்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல்களின் நியமனங்களைத் தொடர்ந்து மொத்தமாக இராணுவத்தில் உள்ள மேஜர் ஜெனரல் தரத்திலுள்ள இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கை 13ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை சிறிலங்கா இராணுவத்தில் 45 பிரிகேடியர்களும், 47 கேணல்களும், 131 லெப்ரினன்ட் கேணல்களும் தற்போது கடமையாற்றுவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இதேவேளை சிறிலங்கா இராணுவத்தின் கொமாண்டோ படைப்பிரிவின் விசேட பிரிகேட்டின் கட்டளையிடும் அதிகாரியாக பிரிகேடியர் ஜானக பெரேரா நியமிக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பிரிட்டன், இந்தியா, சவுதி நாடுகளுக்கு புதியதூதுவர்?

(கொழும்பு)

ஐக்கிய இராச்சியத்துக்கான இலங்கையின் தூதுவராக சந்த குசும் விக்கிரமசிங்காவும் இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவராக மங்கள முனசிங்காவும் சவுதிஅரேபியவுக்கான இலங்கையின் தூதுவராக அகமத் ஜாவிட் யூசுப்பும் நியமனம் செய்யப்படவுள்ளனர். இது தொடர்பாக இலங்கை பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் தொடர்பான குழு பகிரங்க அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

# மலையக மக்கள் முன்னணி ஒரு ஜனநாயக அலையாகும்

- பொதுச் செயலாளர் காதர்.

(பதுளை)

மலையக மக்கள் முன்னணி என்பது ஜனநாயக மக்கள் அலை என்றே கூற வேண்டும். இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரான பீ. ஏ. காதர் தெரிவித்தார்.

அண்மையில் பதுளை கலன் தோட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில், ஜனநாயகம் மறையும் சந்தர்ப்பத்தில் ஊழல்கள் மலிந்து பரவுகின்றன. நமது கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு அளித்த காரணத்தினால் தான் பிரதி அமைச்சர் பதவி கிடைத்துள்ளது. இதன் மூலம் தோட்ட மக்களுக்கு நாம் சேவை புரிய முனைந்துள்ளபடியால் கொந்தளிப்பு அடைந்துள்ள இதர தமிழ் தொழிற்சங்கங்கள் மற்றும் பிரமுகர்கள் மலையக மக்கள் முன்னணியை ஒரு பயங்கரவாதக் கட்சி என்று பிரசாரம் செய்யும் சூழ்ச்சியில் இறங்கியுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

# மாகாண சபை அதிகாரம் மீளப் பெறப்படும் அறிகுறி

(மட்டக்களப்பு)

வீதி நிர்மாணப் பணிகளில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் படிப்படியாக பறிக்கப்பட்டு வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அரசியலமைப்பின் 13 -வது திருத்தச் சட்டப்படி மத்திய அரசின் கீழுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை ஏ.

ஆனால் சுகாதார, சமூக சேவைகள், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி சகல தர வீதிகளையும் வீதி அபிவிருத்தி அதிகார சபை திருத்த முடியுமென இப்போது பணிப்புரை விடுத்துள்ளார். இதனால் அதிகாரிகளுக்கு முடிவு எடுக்க முடியாத இக்கட்டானநிலைதோன்றியுள்ளது.

மாகாண சபைகளுக்கு ஏற்

# பிரான்ஸில்இருந்துவந்தமணமகனுக்கு மலையகத்தில் நடந்த கதி

(கொழும்பு)

பிரான்ஸிலுள்ள மணமகனுக்கு ஜேர்மனியில் வாழும் சகோதரி ஜேர்மனியில் இருக்கும் மணப்பெண்ணின் சகோதரர் மூலமாக சம்பந்தம் பேசினாராம். மாப்பிள்ளையும் பெண்ணும் இலங்கையில் ஒரே ஊரில் வாழ்ந்தவர்கள், அறிந்தவர்கள் என்பதால் எந்தவித தடங்கலும் இன்றி திருமணம் நிச்சயமாகியுள்ளது.

திருமணம் கொழும்பில் நடத்தப்படுவதாகவும் மணம் முடித்த ஆறுமாதங்களுக்குள் பெண்ணை வெளிநாட்டிற்குக் கூட்டிச் செல்வதாகவும் மணமகன் ஒத்துக் கொண்டுள்ளார்.

அதற்கமைய மாப்பிள்ளை தனது சகோதரியுடன் கொழும்பிற்கு வந்து லொட்ஜில் தங்கியுள்ளார். ஒரு வாரத்திற்குள் தான் திரும்பிப் போக இருப்பதாகவும் அதற்குள் திருமண நாளை நிச்சயித்து விடும்படி அவர் கூறவே மணநாளும் நிச்சயிக்கப்பட்டு அழைப்பிதழ்களும் அச்சடிக்கப்பட்டு திருமண ஏற்பாடுகளும் நடைபெற்றன.

பெண் வீட்டாரும் இந்தத் திருமணத்தை எப்படியாவது முடித்துவிட வேண்டும் என்ற நோக்கில் கடன்பட்டு உடனடியாகப் பெண்ணுக்கு வேண்டிய நகைகளையும் செய்து தாலிக்கொடிக்கும் ஏற்பாடு செய்துள்ளனர்.

திருமண தினத்திற்கு முன் தினம் மணமகனும் அவரது சகோதரியும் உறவினர் ஒருவருக்கு அழைப்பிதழ் கொடுத்து விட்டு வருவதாகக்கூறி மலையகப்பகுதிக்குச் சென்றவர்கள் திரும்பிவரவே இல்லை.

மறுநாள் மணநாள் என்பதால் மாலை வரை மாப்பிள்ளையை எதிர்பார்த்து காத்திருந்த மாப்பிள்ளையின் மைத்துனர்கள் மாப்பிள்ளையின் நிலை அறிவதில் மும்முரமாக ஈடுபட்டனர்.

மணநாளும் வந்தது. ஆனால் மாப்பிள்ளையைப் பற்றி எந்தவித தகவலும் இல்லை. பலரும் பலவாறு எண்ணிக்கொண்டனர். பெண் வீட்டார் பெரிதும் பதற்றமடைந்தனர். ஒருவாரம் சென்றதும் மாப்பிள்ளையிடமிருந்து தொலைபேசி அழைப்பொன்று வெளிநாட்டிலிருந்து வந்தது.

தாங்கள் மலையகத்திற்கு சென்ற இடத்தில் தங்களை பொலிசார் பிடித்து நகைகளை எடுத்துக்கொண்டதாகவும் தங்களது பாஸ்போர்ட், டிக்கெட்டைப் பார்த்து நேராக விமான நிலையத்துக்கு அழைத்து வந்து விமானத்தில் ஏற்றி வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டதாகவும் மாப்பிள்ளை கூறினாராம்,

## காவல்துறையினர் நடவடிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் வீதிகளில் கூட்டாக செல்பவர் மீது கடும் நடவடிக்கையினை மேற் கொண்டுவருகின்றனர்.

நேற்று முன்தினம் தனியார் கல்வி நிலையங்களில் படித்துவிட்டு சாவச்சேரி நகரப் பகுதியில் வீதியால் செல்வோருக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் சென்ற ஒன்பது வாலிபர்களை திடீரென வீதி ஒழுங்கினை நடாத்திய காவல்துறை குழுவினர் பணிமனைக்கு அழைத்துச் சென்று கடுமையாக எச்சரித்து விடுதலை செய்தனர். (86)

## திருட்டு

(தென்மராட்சி)

கொழும்பில் இருந்து கிளாலியூடாக பயணம் செய்த பெண்மணியிடம் இருந்த தங்கநகைதோடு திருட்டுப் போனது.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது, இன்பருட்டி பருத்தித்துறையைச் சேர்ந்த முருகுப்பிள்ளை கண்ணகை அம்பாள் என்பவர் கடந்த 16-ம் திகதி இரவு தனது சேலையில் தனது கோட்

# எதிரிகள் வெளியே இல்லை உள்ளேயே இருக்கிறார்கள்.

-தொண்டமான்

எமக்கு எதிரிகள் யாரும் வெளியில் இல்லை. எமக்கு உள்ளேயே இருக்கிறார்கள் இவர்களை நாம் இனங்கண்டு ஒதுக்கி வைக்க வேண்டும். இவ்வாறு அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார்.

முக்கியத்தர்களின் முகவரிகள் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், எமது நாட்டிலோ, இனங்களுக்கு இடையிலோ ஏற்படும் பிரச்சினைகளுக்கெல்லாம் இங்குள்ள சில பத்திரிகைகள் தான் பாரிய பங்களிப்பை செய்து வருகின்றன. நாம் எத்தனையோ இழப்புக்கள், சோதனைகள், வேதனைகள் எல்லாவற்றுக்கு மத்தியிலும் சிறந்த பல சாதனைகளை செய்து இருக்கிறோம். இதனை நன்கு அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் கூட இன்று நாம் என்ன செய்தோம் எனக் கேட்கிறார்கள். அவர்களை ஒருபோதும் எம்மால் திருத்த முடியாது எனவும் குறிப்பிட்டார்.

6-ம் ஆண்டில்
ஈழநாதம்
போட்டிகளும்
விதிமுறைகளும்

6-ம் ஆண்டில்
ஈழநாதம்
மாணவர்களுக்கான
கட்டுரைப் போட்டி
ஈழநாதம் மக்கள் தினசரி தனது ஆறாம்

## விதிமுறைகளும்

ஈழநாதம் மக்கள் தினசரி ஆறாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதைமுன்னிட்டு சிறுகதைப்போட்டி, கவிதைப் போட்டி என்பவற்றை நடாத்தவுள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளை பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

### ★ சிறுகதை ★ கவிதை

### போட்டிகளில் கலந்து கொள்வோர் கடைப்பிடிக்க வேண்டியவை

- படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளையோ சமூகப் பிரச்சினைகளையோ சித்திரிக்கும் வண்ணம் அமையலாம்.
- படைப்புகள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதைஉறுதிப் படுத்த வேண்டும்.

போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் ஜனவரி 31- ம் திகதிக்குப் பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

போட்டி முடிவுகள் யாவும் 17. 02. 1995 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் ஆறாம் ஆண்டின் ஆரம்ப விழா மலரில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானவை எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்கள் ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு ஆறாம் ஆண்டின் ஆரம்ப நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம் ஆறாம் ஆண்டுப் போட்டி' என கடித உறையில் இடது பக்கமேல். மூலையில் குறிப்பிடப்பட்டு,

**ஆசிரியர்,**
**ஈழநாதம்**
**31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்**
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

அரசின் கீழுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை ஏ. பி. தர நெடுஞ்சாலைகளையும், மாகாண சபைகளின் கீழுள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களம் சி. டி. தர வீதிகளையும் ஏனைய சிறிய வீதிகளை உள்ளூராட்சி சபைகளும் திருத்தி பராமரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

...டானநிலைதோன்றியுள்ளது.

மாகாண சபைகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகாரங்களை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு மீளப் பெற முயலுகிறதா? என்ற கேள்வி அமைச்சரின் இப்பணிப்புரையைத் தொடர்ந்து எழுந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## வவுனியா தமிழ்ப்பிரிவு பிரதேசசெயலர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா தமிழ்ப்பிரிவு பிரதேச செயலாளர் திரு. அமிர்தலிங்கம் உடனடியாக வடக்கு-கிழக்குமாகாணசபையில்பணியாற்றுவதற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சுமார் மூன்று ஆண்டுகள் இவர்வவுனியாதெற்கு தமிழ்ப் பிரிவின் பிரதேச செயலராக பணிபுரிந்து வந்தார். புதிய அரசு பதவிக்கு வந்ததை அடுத்து இவர் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு திடீர்என்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் பணிபுரிந்த பலரும் மாகாண சபையில் பணியாற்றுவதற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேசமயம், வடக்கிலும் கிழக்கிலும் பல அரச அதிகாரிகள் மாகாணசபைசெயலகத்திற்கு பணியாற்றுவதற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். [தி]

## நிதி ஒதுக்கீடு

(தென்மராட்சி)

பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு கட்டட வேலைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந் நிதியான சுமார் ஒன்றரை லட்சம் ரூபாவை பயன்படுத்தி நாற்பது அடி நீளமும், 20 அடி அகலமும் உடைய மாநாட்டு மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

(86)

## பக்தர்களுக்கு தொந்தரவு பிக்குவுக்கு தண்டனை

(கொழும்பு)

மது போதையில் யாத்திரிகர்களுக்கு தொந்தரவு செய்த பிக்கு ஒருவர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டார். இச் சம்பவம் கண்டியில் நீதிமன்றத்தில் இடம் பெற்றது.

கண்டி சிறீ தலதா மாளிகையின் முன்பாக மது போதையில் யாத்திரிகர்களுக்கு தொந்தரவு செய்த இப் பிக்கு பொலிசாரால் கண்டி மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார். அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து 2500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் எச்சரிக்கையும் செய்யப்பட்டார்.

அம்பாள் என்பவர் கடந்த 16- ம் திகதி இரவு தனது சேலையில் தனது தோட்டினை முடிந்து தனது பையினுள் வைத்துவிட்டு பயணத்தை மேற்கொண்டு அல்லிப்பளை கரையை வந்து பஸ்சில் பிரயாணத்தினை மேற்கொள்ள ஏறி இருந்த போது இவருக்கு உதவி செய்வதாக இவரது பையினை தூக்கி தானும் பருத்தித்துறைக்குப் போவதாக கூறி விட்டு இவரது பின் ஆசனத்தில் இப் பெண்மணியின் பையுடன் இருந்த இந் நபர் மேற்படி பெண் தனது அருகில் இருந்த பெண்ணுக்கு தனது பையினுள் சேலையில் தோடு முடித்துப்போட்டுவைத்திருப்பதை கூறினாராம். இதை செவிமடுத்த இந் நபர் உடன் அதற்குள் இருந்த சேலை முடிச்சை அவிழ்த்து தோட்டினை திருடியிருந்தாராம். பெண்மணி சற்றுநேரத்தினால் பையை திறந்து பார்த்தபோது முடிச்சில் இருந்த தோடு இல்லாமல் இருந்ததை அடுத்து பளை காவல் துறையினரிடம் உடன் கூறிய போது காவல் துறையினர் சந்தேக நபரைவிசாரணைக்கு உட்படுத்தியபோது இவரது சேட் பொக்கட்டில் இருந்து தோடு மீட்கப்பட்டது. முழங்காவில் பகுதியைச் சேர்ந்த மேற்படி நபர் காவல் துறையினரின் பாதுகாப்பில் உள்ளார் (86)

## கண்டெடுப்பு

பளை காவல்துறை பணிமனையில் இரு தேசிய அடையாள அட்டைகள் உள்ளன.

தவச்செல்வம் சிவகுமார் தொல்புரம் மேற்கு சுழிபுரம் இல. 721871410 V, இராசையா பரமேஸ்வரி சரவணை இல. 506752647V என்ற இலக்கமுடைய அடையாள அட்டைகள் உள்ளன உரியவர்கள் மேற்படி காவல் துறை பணிமனையில்பெற்றுக் கொள்ளலாம் என காவல் துறையினர் அறிவித்துள்ளனர். (86)

ஈழநாதம் மக்கள் தினசரி தனது ஆறாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதையொட்டி பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றை நடாத்த முன்வந்துள்ளது.

### தலைப்பு:

''எமது சமூகத்தின் தேவைகளை இன்றைய கல்வி பூர்த்தி செய்கின்றதா''?

### போட்டி விதிகள்:

- கட்டுரைகள் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- சுமார் 1500 சொற்களுக்குமேற்படாதிருக்க வேண்டும்.
- கட்டுரையாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்படுவதுடன் கட்டுரையாளர் பாடசாலை மாணவர் என்பதும் கட்டுரை அவருடைய சொந்த ஆக்கம் என்பதும் பொறுப்பு வாய்ந்த ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும் 1995 ஜனவரி 31ஆம் திகதிக்கு பிந்தாமல் ஈழநாதம் அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது
- போட்டி முடிவுகள் 17-2-1995 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்
- இப்போட்டியில் முதலாவது பரிசு பெறும் கட்டுரை ஆறாம் ஆண்டுவிழா மலரில் பிரசுரிக்கப்படும்
- முதல் மூன்று இடங்களையும் பெறும் கட்டுரைகளுக்கு ஆறாம் ஆண்டின் ஆரம்ப நாளில் சிறப்பு பரிசில்கள் வழங்கப்படும்.
- கட்டுரைகள் அனைத்தும் 'ஈழநாதம்ஆறாம்ஆண்டு போட்டி' எனகடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு;

**ஆசிரியர்**

**ஈழநாதம்**

**31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரியில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

# பெண் நூலகர் தேவை

நூலக விஞ்ஞானம் படித்துள்ள பெண் நூலகர் தேவை.

விபரங்களுக்கு 29-12-1994 அன்று சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

முகவரி:- பாரதி படிப்பகம்,
பெண்கள் ஆய்வு நிறுவனம்,
இராச வீதி, கல்வியங்காடு,
கோப்பாய்.

(10494)


# இரண்டாம் ஆண்டு எங்கள் நெஞ்சில்



தோற்றம்
1975-08-31

மறைவு
1992-12-17

## நாகராசா கமலராசா (கரன்)

ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
உன் துயர் மாறாதடா
எங்கள் இதயத்தில் என்றும்
ஒளி தந்த கரனே
உன் உடல்தான் மறைந்தாலும்
உன் நினைவு எங்கள் மனதில்
என்றும் பிரகாசித்துக்கொண்டே இருக்கும்.

உங்கள் ஆத்ம சாந்திக்கு
இறைவனை வேண்டும்
**அப்பா, அம்மா, அக்கா,**
**அத்தான், அண்ணன்மார்,**
**பேரன், பேர்த்தி.**

இல. 15, பூமகள் வீதி,
அரியாலை, மேற்கு.

(10489)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி




¡ழழ ஶமழ

வருடம் 365
நாளும் தினமும்
காலை 11. 45 முதல் 3. 30 பிற்பகல் வரை
ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின்
உணவுப் பொதிகளை தங்கு
தடையின்றி பெற்றுக்கொள்ளலாம்.

## ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி- 10976)


# 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
18-12-1942

இறப்பு
27-11-1994

## அமரர் சித்தர் கந்தசாமி

**(பொலிஸ் சார்சன்)**

தென்மராட்சி - வரணிவடக்கு

சீர்பூத்த செந்தமிழோங்கு பதியாம் வரணிதனிலே
குடும்பத்தின் குணக் குன்றாய் ஒளிவீசிய குலவிளக்கே
அன்புடன் ஆழமாக எமை அழைத்த மாணிக்கமே
பரமபதி உமையழைக்க எமைவிட்டு சென்றீர் ஐயா.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

வரணி வடக்கு,
வரணி

**மனைவி, பிள்ளைகள்**
சுற்றத்தார், உறவினர்கள்

(10376)

# தனியார் மருத்துவக் கல்லூரியை கிழக்கு பல்கலை.யுடன் இணைக்கவும்

**- மட்டக்களப்பு பா. உ. கோரிக்கை**

(மட்டக்களப்பு)

வடஇலங்கை மருத்துவக் கல்லூரியை கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்க வேண்டும். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வந்தாறுமூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் கலாநிதி ஸ்ரீபன் குழுவின் சிபாரிசுகளுக்கமைவாக வட கொழும்பு தனியார் மருத்துவக் கல்லூரி களனி பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டினார்.

கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரானவும் கலந்து கொண்ட இவ் வைபவத்திற்கு கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் சந்தானம் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையின் போது இப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு 13 வருடங்களாகி விட்டபோதும் இன்றும், இரண்டு முதலாம் தர பாடசாலைகளிலேயே இயங்கி வருகிறது. தற்போது 721 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். மேலும் 357 பேர் அடுத்த மாதத்தில் சேர்க்கப்படவுள்ளனர். ஆனால் வந்தாறுமூலையிலுள்ள விடுதிகளில் 240 பேர் தங்கும் வசதியே உள்ளது. கல்லடி, காத்தான்குடி, ஏறாவூர் பகுதிகளில் ஏழு தனியார் வீடுகளில் 70 பேர் அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் தங்கியுள்ளார்கள். பிரபல பாடசாலைகளில் இருக்கும் அடிப்படை வசதி கூட கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இல்லை. கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்திக்கு 935 மில்லியன் ரூபா தேவை. வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கு செலவு செய்யும் நிதியின் ஒரு மாத ஒதுக்கீடு இது எனவும் குறிப்பிட்டார்.


நத்தார் நன்னாளிலே

திடீர் விருந்தினருக்கு
விருந்தளிக்க தினமும்

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா தரும்

நத்தார் வெகுமதி நாவிற்கு சுவையும்

நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு பெறுமதி மிக்க சுகாதாரமான பண்டங்களை, நத்தார் வெகுமதியாக தினமும் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளவும் அத்துடன் எமது விருந்தகத்தில் ஒன்று கூடி உண்ணலாம் **விசேஷ லம்பாரிஸ் புரியாணி,** கோழி புரியாணி (நெய்க் கலவை), ஆட்டிறைச்சி புரியாணி (நெய்க் கலவை), **Sea Food Mixed Grill** புரியாணி, பிறைட் றைஸ் (எல்லா இறைச்சி வகைகளுடன்), நூடில்ஸ் இன் **Soya Souce**

**Rice & Curry With Special Meat**

வீட்டிற்கு வெளியிலே ஒரு மனை
அது ஜெசித்தாரா தரும் மனை

தினமும் காலை 10. 00 மணி முதல்
இரவு 7. 00 மணி வரை திறந்திருக்கும்.

24, 25, 26-ம் திகதிகளில்
இரவு 10. 00 மணி வரை திறந்திருக்கும்

ஜோ. எகட்டனின்

## ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

புது யுகத்தில் புது உலகம்
ஜெசித்தாரா
எமக்கு வேறு கிளைகள் இல்லை

(சி-10975)


# குழந்தைகள் திருநாள்

(கொழும்புத்துறை)

யாழ். கத்தோலிக்க கிறிஸ்தவ தேவாலயங்களில் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன் கிழமை மாசில்லாத குழந்தைகள் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

(24)

# திருட்டுகள் பிடிபட்டன

(தென்மராட்சி)

கிளாலியூடாக பயணம் செய்த இரு பயணிகளிடம் 11,000 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடிய இருவர் காவல்துறையினரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

கடந்த 16ம் திகதி கர

# மாபெரும் உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட போட்டிகள்



அமரர்

## உயர்திரு. வேலுப்பிள்ளை மார்க்கண்டு

மலர்வு:- 01.06.1933 உதிர்வு:- 26.12.1993

ஒளிமுகம் மறைந்து ஓராண்டு சென்றாலும்
வலியுள்ளவரை ஆண்டுகள் ஆயிரமாயிரம்
சென்றாலும்
துளி கூடத் துக்கம் தெரியவில்லை எமது
உள்ளக் கோயிலிலே
உளி கொண்டு செதுக்கிய உணர்வுள்ள உருவம்
வாழ்வதனாலே
எத்தொழில் முயற்சியும் புத்தெழில் பெற்றிடவும்
அத்தொழில் ஆங்கே வெற்றியில் வீறு நடை
போட்டிடவும்
சத்தியத்தின் வழியிலே சார்ந்து நாம்வாழ்ந்திடவும்
உத்தமரே உங்கள் உருவம் தெரியுதே!
உருவம் தெரியுதே!
உங்கள் நாமத்தினாலே நன்மைகள் ஓங்க
உங்கள் பிள்ளைகள் என்பதனாலே பெருமைகள்
பெருக
நாங்கள் என்றும் மகிழ்ச்சியில் திளைக்க
நீங்கள் பேரொளியில் கலந்து பேரின்பம் பெறுக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கல்லுவம், மனைவி, பிள்ளைகள்.
கரவெட்டி. (10469


# 6-வது ஆண்டில் காலடி வைக்கும் ஈழநாதம் மக்கள் தினசரியினர்

நடாத்தும்

# மாபெரும் உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட போட்டிகள்

## காலம்: ஜனவரி 20 தொடக்கம் பெப்ரவரி 5 வரை

★ பங்குபற்ற விரும்பும் கழகங்கள் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

★ பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்கள் ஜனவரி 5-ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

★ விண்ணப்பப் படிவங்களின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட போட்டிகள் என இடப்பட்டு, ஈழநாதம், 31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

★ பிரவேசங்கள் யாவும் முற்றிலும் இலவசம் ★

(போட்டிக்கான மைதானம் பின்னர் அறிவிக்கப்படும்)


வெட்டி மேற்கு கரவெட்டியைச் சேர்ந்த திருமதி பொன்னன் அற்புதமலர் என்பவரிடம் இவரது பையில் இருந்த 5000/- ரூபா பெறுமதியான பொருட்களை பையுடன் அளவெட்டியைச் சேர்ந்த ஒருவர் அல்லிப்பளை இறங்குதுறைப் பகுதியில் வைத்து அபகரித்து விட்டு தலைமறைவாகிவிட்டாராம்.

தவறவிட்டதை உணர்ந்த பெண்மணி உடன் காவல் துறையினருக்கு முறைப்பாடு செய்ததை அடுத்து தேடுதலை மேற்கொண்டு இருந்தனர்.

இதே நேரம் அரியாலையைச் சேர்ந்த படகில் பிரயாணம் செய்த வேதநாயகம் இரகுநாதன் என்பவரிடமும் 6,000 ரூபா பெறுமதியான பொருட்களை பையினுள் வைத்திருந்தபோது திருடப்பட்டதாக அறிந்த காவல் துறையினர் தீவிரமாக செயல்பட்டு இருவரையும் ஒரே நேரத்தில் மடக்கிப் பிடித்தனர். இவ் இருவரும் அளவெட்டியை சேர்ந்தவர்கள். இவர்கள்இருவர்களின்திருட்டுகளில் தொடர்புகள் காணப்படுகின்றது. இவர்கள் தற்போது காவல் துறையின் பாதுகாப்பில் உள்ளனர்.

(86)

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

ஏழாலை லெனின் சனசமூக நிலையத்தின் அறவழி மழலைகள் கல்விப்பூங்காவின் ஆண்டு விழா நிகழ்வும், பரிசளிப்பு வைபவமும் கல்விப் பூங்காவின் அபிவிருத்திச் சபையின் தலைவி திருமதி ஜெ. சிவலோகநாயகி தலைமையில் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வுகளில் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (24)

### சிந்தனைக்கு..

மற்றவர்களுக்கு உரித்தான உரிமைகளை வழங்கும் போது நாம் உரிமைகளை எதிர்பார்ப்பது அடிக்கடி பொய்த்து விடுகிறது. அதிலும் அதிகம் ஆசை காட்டுகிற போதுதான் அது அடிக்கடி பொய்த்துவிடுகிறது.

-வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்-05

# சமாதானத்தின் அடிப்படை

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஊக்குவிக்கவும், அவற்றிற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கவும் எட்டுப்பேர் கொண்ட ஆலோசனைக்குழுவை இனவிவகார தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அமைத்துள்ளார்,

பிரதி அமைச்சரின் இந்நடவடிக்கையானது இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு எத்தகைய தூரம் கைகொடுத்து உதவும் என்பது ஒருபுறம் இருக்க, இனப்பிரச்சினை விவகாரத்தில் சமாதானப் பேச்சுக்களுக்கான உகந்த சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பது மிகவும் முக்கியமானதும் தவிர்க்கமுடியாததுமாகும். இதன் மூலமே சமாதானத்தின் மீதான தனது நம்பிக்கையை தமிழ்மக்களுக்கு வெளிக்காட்ட முடியும். இதுவே சமாதானத்தின் முதல் நிலையும் ஆகும்.

சுமார் ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட போரின் பின்னர் சமாதானம் ஏற்பட வேண்டுமானால் அது இலகுவில் ஏற்பட்டு விடக் கூடியதல்ல. அத்தோடு சிறிலங்காவின் கடந்த கால அரசியல் வரலாற்றை உற்றுநோக்கின் இவ் உகந்த சூழ்நிலையின் அவசியமும், தேவையும் உணரப்படும்.

சுமார் 45 வருடங்களாக தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒடுக்கு முறையால் தமிழ்ச்சமூகம் சிங்கள ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கை இழந்து போயுள்ளது. இவ் ஒடுக்குமுறையானது ஒன்றல்ல, இரண்டல்ல. அதே போன்று இதன் வடிவங்களும் வேறுபட்டவையாகவே இருந்தன.

ஒருபுறத்தில் மொழி உரிமை மறுக்கப்பட்டதோடு, உயர்கல்வி வசதியும் மறுக்கப்பட்டது. தமிழரின் தாயகம் ஆக்கிரமிக்கப்பட்டது. அதற்கு எதிராகச் சாத்வீகப் போராட்டங்கள் எழுந்த போது அவை ஆயுதமுனையால் அச்சுறுத்தப்பட்டது/ அடக்கப்பட்டது. அரச பயங்கரவாதம் தமிழர் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டது.

மறுபுறத்தில் சமாதானப் பேச்சுக்கள், உடன்பாடுகள் என காலத்திற்குக் காலம் ஏற்பட்டன. இறுதியில்

# தண்டனைச் சட்டம்

# நீதி நிர்வாகத்துறையின் ஒரு மைல் கல்

தமிழீழ நீதி நிர்வாகத் துறையின் உருவாக்கமும் அதன் செயற்பாட்டு வளர்ச்சியும் மிகவும் அண்மையானது. அது விடுதலைப்புலிகள் எனும் சொல்லுக்கே உரித்தான வேகமான முன்னேற்றத்தினை எய்திய வண்ணம் உளது. ஒரு நாட்டின் நீதி பரிபாலனம் என்பது முழுமையாக அந்த நாட்டில் மனித உரிமைகளைப் பேணுதலோடு தொடர்புபட்ட ஒரு பிரதான அம்சமாகும். அவ்வாறான மனித உரிமையைப் பேணுவதில் பங்கெடுக்கும் நீதி நிர்வாகம், பல்வேறுபட்ட பரிமாணங்களில் தனது நீதி பரிபாலனத்தை நகர்த்திச் செல்கின்றது. அவற்றில் நீதிமன்றுகளது இயக்கம், சட்டவாக்கங்கள், சட்டக்கல்வி புகட்டல் போன்றன மிகவும் பிரதானமானவைகளாகும். அத்தகைய தமிழீழ நீதி நிர்வாகத்துறை தமிழீழத் தேசியத் தலைவரால் வழிநடத்தப்படுகின்ற பிரதானமான பல துறைகளுள் ஒன்றாக உள்ளது.

இன்றைய நிதர்சன உலகின் பல்வேறுபட்ட நாடுகளில் நிலவும் நீதி நிர்வாக அமைப்பு வெவ்வேறுபட்ட ஒழுங்குகளில் காணப்படுகின்றது. எனினும் நீதிபரிபாலனத்திலுள்ள பல பொதுப்பண்புகளை இன்றைய உலகின் பல நாடுகள் பெரும்பாலும் பின்பற்றுகின்றன. இவ்வாறான உலக ஓட்டத்திற்கு ஒத்திசைவான முறையில், இன்றைய தமிழீழ நீதி நிர்வாகம், தன்னாட்சி உடைய தமிழீழத்தினை நோக்கிய ஓர் படிக்கல்லாகவும் அமைகின்றது.

ஒரு நாட்டில் சுயநிர்ணய உரிமைகளின்படி விடுதலைக்காகப் போராடும் ஒரு மக்களமைப்பு ஒரு நாட்டுக்கே உரித்தான பல துறைகளை உருவாக்கி, தனது விடுதலைப்போரை நகர்த்திச் செல்கின்றமை, இன்றைய உலகில் தமிழீழத்திலேயே இடம் பெறுகின்றது என்பது எதார்த்தபூர்வமான ஒன்று, நீதி நிர்வாகத்தின் பல பரிமாணங்களில் இன்று தமிழீழத்தில் மிகப்பிரதானமான மூன்று பரிமாணங்கள் முன்னேற்றம் பெறுவதைக் காணலாம். அதில் சட்டக்கல்வி புகட்டல் மூலம் நீதியாளர்கள், சட்டவாளர்களின் உருவாக்கம் அடிப்படையானது. அத்தகைய சட்ட அறிவின் அடிப்படையிலும் உலகளாவிய ரீதியில் பின்பற்றப்படும் சட்டமுறைகள் நீதிமுறைகளின் அடிப்படையிலும், ஆக்கப்படும் சட்ட ஆக்கங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. சட்ட ஆக்கங்களின் ஊடாக, நீதிமன்றுகளின் நகர்வியக்கம் செயற்படுத்தப்படுகின்றது. சாதாரணமாக இயற்கை நீதியின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்ட நீதி செலுத்துகை, இன்று படிமுறை வளர்ச்சியினால் சட்டவாக்கங்களின் ஊடாக செயற்படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத் தக்கதோர் மாற்றமாகும்.

இவ்வாறாகச் சட்டவாக்கம் நீதி செலுத்துகையில் முழுமையான பங்கு வகிக்கின்றது. இன்று தமிழீழத்தில் நீதி செலுத்தப்படுவதற்கான சட்டங்கள் 1993-ம் ஆண்டின் கடைக் கூறில் இருந்து தமிழீழத் தேசியத் தலைவரின் ஒப்புதலின் ஊடாக ஆக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வரிசையில் இந்த ஆண்டின் டிசம்பர் முதலாம் நாளில் இருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தமிழீழ ஒறுப்புச் சட்டம் (PENAL CODE OF TAMIL EELAM) மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

இந்த ஒறுப்புச் சட்டமானது சட்டத்தின் பெரும் கூறுகளில் ஒன்றான குற்றவியல் தொடர்பினில் மிகவும் பிரதானமானதாகும். ஆகையால் இன்று உலகின் அநேக நாடுகள் தமது தேவைகட்கு ஏற்றவகையில் ஒரு ஒறுப்புச் சட்டத்தினை அல்லது குற்றச் சட்டத் தொகுப்பினை நடைமுறையில் வைத்துள்ளன. அந்த வகையிலே 'தண்டனைச்சட்டத் தொகுப்பு' இன்று தமிழீழத்திலும் எமது தேவைக்கேற்ற வகையினில் 'தமிழீழ ஒறுப்புச் சட்டம்' எனும் தமிழ்ப் பெயரைத் தாங்கி வெளிவந்துள்ளது.

இச்சட்டத்தொகுப்பு தமிழீழத்தில் இனம் காணப்பட்ட பல்வேறு குற்றங்களையும் சர்வதேச ரீதியில், அனேக மானவர்களால் இனம் காணப்பட்ட குற்றங்களில் பலவற்றையும் அடக்கியதாய் அமைந்துள்ளது. இச்சட்டத்தின் முழுமையான நோக்கம் என்னவெனில் தமிழீழப் பரப்பினில் இழைக்கப்படுகின்ற பல்வேறுபட்ட பிழையான செயல்களைத் தடைசெய்வதும், அவ்வாறாகத் தடைசெய்யப்பட்ட செயல்களைச் செய்பவர்களைக் குற்றவாளியாக இனம் காணப்படுமிடத்து அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய தண்டனைகளையும் ஏற்பாடு செய்து இயல்பான சுதந்திரமான மனித உரிமைகளைப் பேணத்தக்க சமூக வாழ்வினைத் தொடர்ந்து இருக்கச் செய்வதுமே ஆகும்.

இவ்வொறுப்புச்சட்டம் 26 அத்தியாயங்களையும் 438 பிரிவுகளையும் தன்னகத்தே கொண்டதாக உள்ளது. இதில் ஒருவரின் குற்றமான செயலைத் தண்டிப்பது தொடர்பான ஏற்பாடுகள் இருக்கின்ற அதேவேளை மனித உரிமைகளைப் பேணுவதனை வலியுறுத்தும் வகையில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்புக்களான குழந்தை நிலையில் உள்ள ஒருவரின் செயல்கள், சித்த சுவாதீனமற்ற ஒருவரின் செயல்கள், சூழ்நிலையைப் பிழையாக விளங்கிக் கொண்டவரின் செயல்கள், தற்காப்புக்காகச் செயற்படுபவரின் செயல்கள் பற்றிய ஏற்பாடுகளும் அடங்கியுள்ளன. இப்பாதுகாப்புக்கள் ஒருபோதும் குற்றவாளிகள் தப்பிப்போவதற்காக ஏற்படுத்தப்பட்டவையல்ல. மாறாக சில விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் இவ்வாறானோரின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவேயாகும்.

எமது இனத்தினைப் பொறுத்தவரை நாம் கண்ணியமான ஒரு குடும்ப வாழ்வொழுங்கினைப் பின்பற்றும் ஓர் இனம். எனவே அதற்கேற்றவாறு கண்ணியமான குடும்ப வாழ்வினை வலியுறுத்துவதற்கும் பல நோய்களையும் தாழ்வு மனப்பாங்கினையும் பரப்பவல்ல பாலியல் சார் குற்றங்களையும் தடைசெய்யும் ஏற்பாடுகளும் இதில் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சட்டத்தின் பிரகாரம், 1994 ஆம் ஆண்டின் டிசம்பர் 1-ம் நாளிலிருந்து தமிழீழத்தில் இழைக்கப்படுகின்ற குற்றச் செயல்களைத் தமிழீழக் காவல்துறையினர் இனம் கண்டு அதற்குரியவர்களைப் பிடித்துத் தகுதிவாய்ந்த குற்றவியல் நீதிமன்றில் குற்றவியல் வழக்கினைத் தொடுப்பார்கள். அதன் பின் இதனை ஆராயும் நீதிமன்று இச்சட்டப்பிரகாரம் குறித்த குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றப் பொறுப்பை இனம் காணுமிடத்து அவருக்குரிய தண்டனையை சிறையாகவோ அல்லது குற்றக்காசாகவோ அல்லது இவை இரண்டையும் சேர்த்தோ வழங்கும். சில கடுங்குற்றங்கட்கு மரண தண்டனையும் (சாவொறுப்பு) குறித்த நீதிமன்றுகள் இச்சட்டத்தின்படி விதிக்க முடியும். மேலும் காவல்துறையினருக்கும் நீதிமன்றுக்களுக்கும் குற்றச் செயல்கள் தொடர்பான தகவல்களைக் கொடுப்பதற்கு அது பற்றி அறிந்த ஒவ்வொரு குடியானவனும் கடப்பாடுடையவன் ஆகின்றான்.

இச்சட்டத் தொகுப்பில் அடங்கியுள்ள விடயங்கள் முழு அளவில் வடமொழிச் சொற்களைத் தவிர்த்து திராவிட மொழிகளுளொன்றான தமிழ்மொழிச் சொற்களைக் கையாண்டு ஆக்கப்பட்டுள்ளமையும் இது தமிழிலே ஆக்கப்பட்ட ஒரு பிரதான சட்ட நூல் என்பதும் குறிப்பிட்டுக்காட்டக் கூடியவைகள் ஆகும்.

இச்சட்ட நூலில் அடங்கியுள்ள விடயங்களை அனைவரும் தெளிவாக அறிந்து கொள்ளும் பொழுது அதுவோர் பெரிய அளவிலான சமூக மேம்பாட்டினை ஏற்படுத்தும் என்பதில் ஐயம் இல்லை.

-'பிரம்மபுத்திரன்'

# இந்திய முன்னாள் ஜனாதிபதி ஜெயில்சிங் நேற்று காலமானார்

(டில்லி)

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரான

பதவி வரை எட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் சுதந்திரப் போரா

நாட்டு பிரமுகர்கள் பலரும் கியானி ஜெயில்சிங்கின் மறைவுக்கு அனுதாபம் தெரி

# நியூயார்க் நகர ரயிலில் பெரும் குண்டு வெடிப்பு

37 பேர் காயம்

(நியூயார்க்)

நியூயார்க் நகரில் கிறிஸ்மஸ் வாடிக்கையாளர்களால் நிறைந்திருந்த ரயிலில் குண்

இக் குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாகவும், ரயில் பயணி ஒருவரின்மடியிலிருந்த இக்குண்டு வெடித்ததைத்தொடர்ந்து

போராட்டங்கள் எழுந்த போது அவை ஆயுதமுனையால் அச்சுறுத்தப்பட்டது/ அடக்கப்பட்டது. அரச பயங்கரவாதம் தமிழர் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டது.

மறுபுறத்தில் சமாதானப் பேச்சுக்கள், உடன்பாடுகள் என காலத்திற்குக் காலம் ஏற்பட்டன. இறுதியில் அவை சிங்கள ஆட்சியாளர்களால் கிழித்து எறியப்பட்டன. இந்த வகையில் தமிழ்மக்கள் அடைந்த துயர்களும், ஏமாற்றங்களும் சிங்கள ஆட்சியாளர்கள் மீது நிலையானதொரு சந்தேகத்தை அவர்களுக்குத் தோற்றிவித்ததில் தப்பில்லை.

சிலவேளை சந்திரிகா அரசாங்கம் கடந்த காலங்களில் ஏற்பட்ட பகைமைக்கும் நம்பிக்கையீனங்களுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்றும் கூற முயலலாம். ஆனால் அது ஏற்புடைய வாதமாக இருக்காது. இனப் பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாற ஐ.தே.க மட்டும் தான் காரணம் என்றில்லை. சுதந்திரக் கட்சியுமே பொறுப்பு. அத்தோடு கட்சிப்பதவியை வாரிசு உரிமை அடிப்படையில் பெற்ற சந்திரிகா குமாரதுங்கா அதனை மறுக்க முடியாது.

இந்தவகையில் சமாதானச் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டுமானால், தமிழ்மக்களைத் திருப்திப்படுத்தக் கூடியதும், நம்பிக்கை ஊட்டக் கூடிய விதத்திலும் சிங்கள ஆட்சியாளர் நடந்து கொள்ள வேண்டும். அதாவது 45 ஆண்டு கால துரோகமும், ஏமாற்றமும் மறையுமாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆனால், நடைபெறும் விடயங்கள் அவ்வாறானவையாகத் தெரியவில்லை. அரசாங்கமோ, இராணுவமோ நம்பிக்கை யூட்டும் விதத்தில் நடப்பதாக இல்லை. அரசாங்கம் பொருளாதாரத்தடை தளர்த்தப்பட்டதாகக் கூறுகின்றது. அரசின் ஒரு அலகான இராணுவமோ அரசாங்கத்தின் அறிவிப்பை ஏற்றுக் கொண்டு செயற்படுவதாகத் தெரியவில்லை.

இந்தவகையில் பார்க்கும் போது சந்திரிகா குமாரதுங்கா ஆரம்பத்தில் எடுத்த முயற்சிகளும் தோல்வி கண்டது என்றே கூறலாம். ஆனால் ஜனாதிபதிப் பதவி ஏற்ற பின்னர் சந்திரிகா குமாரதுங்கா அதில் அக்கறை காட்டினாரா? என்பது கேள்விக்குரியதே ஆகும். ஏனெனில் அதற்குப் பின்னர் அரசாங்கம் தனது நிலைப்பாட்டில் செய்த மாற்றம் இவ்விவகாரத்தை அவசியமற்றதொன்றாக மாற்றியுள்ளது.

இந்நிலையில் பிரதி அமைச்சரின் சமாதானப் பேச்சுக்களை ஊக்குவிப்பதற்கான உகந்த குழ்நிலையை உருவாக்குவதற்கான குழு உருவாகியுள்ளது. இது அரசனால்முடியாததை அரசனின் சேவகன் செய்யநினைப்பது போன்றதென்றே கூறவேண்டும். ஆனால் அரசன் செய்தால் என்ன? ஆண்டி செய்தாலென்ன? சமாதானத்திற்கான உகந்த குழ்நிலை ஒன்று இன்றி இனப்பிரச்சினைக்குச் சமாதானத்தீர்வு சாத்தியமாகமாட்டாது என்பது மட்டும் உறுதி.

(டில்லி)

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரான கியானி ஜெயில்சிங் நேற்றுக் காலை மரணமானார். வாகன விபத்துக்கு இலக்கான அவர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் கடந்த மூன்று வாரங்களாக சண்டிகார் மருத்துவ மனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தமை தெரிந்ததே.

நேற்றுக்காலை 7.40 மணியளவில் மரணமான கியானி ஜெயில் சிங் மிகவும் சாதாரணமான குடும்பத்தில் பிறந்து இந்தியாவின் அதியுயர் பதவியான குடியரசுத் தலைவர் பதவி வரை எட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் பங்குபற்றி சிறைவாசமும் அனுபவித்தகியானி ஜெயில் சிங், பஞ்சாப் மாநில முதல்வராக, மத்திய அரசில் அமைச்சராகவும், குடியரசுத் தலைவராகவும் பதவிகள் வகித்துள்ளார். சீக்கிய சமூகத்தை சேர்ந்தவரான இவர் குடியரசுத் தலைவராக பதவி வகித்த போதே காலிஸ்தான் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்திய இராணுவம் மேற்கொண்டமை தெரிந்ததே. அரசியல்தலைவர்கள் அரசுத் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டு பிரமுகர்கள் பலரும் கியானி ஜெயில் சிங்கின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

தற்போது சண்டிகார் அரச விருந்தினர் மாளிகையில் வைக்கப்பட்டுள்ள பூதவுடல் புதுடில்லிக்கு கொண்டுவரப்பட்டு அரசாங்க மரியாதைகளுடன் செவ்வாயன்று அடக்கம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரஷ்யர்களை எதிர்த்து நாங்கள் போராடுவோம்

(குரோஸ்னி)

எமது முன்னோர்கள் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக ரஷ்யர்களை எதிர்த்துப் போராடியுள்ளனர், நாங்களும் அதைச் செய்ய முடியும் இவ்வாறு செச்செண்யத்தலைநகர் குரோஸ்னியில் வயோதிபர் ஒருவர் கூறியுள்ளார்.

ரஷ்யாவிலிருந்து பிரிந்து செல்லப்போவதாக செச்செண்ய அதிபர் குடயேவ்அறிவித்ததை தொடர்ந்து மாஸ்கோவிலிருந்து செச்செண்யாவுக்கு மேலதிக படைகள் அனுப்பப்பட்டதும், அங்கு தீவிர சண்டைகள் இடம் பெற்று வருவதும் தெரிந்ததே. மாஸ்கோ எதிர்பார்ப்பதை விட நீண்ட காலத்துக்கு பலத்த சண்டை இடம்பெறலாம் என அவதானிகள் கருத்து தெரிவிக்கும் நிலையில் ரஷ்யா மேலதிகமாக துருப்புக்களை அனுப்பி வருகிறது.

## சீனி ஊழல் விவகாரத்தில் தவறு ஏதும் நிகழவில்லை

**- பிரதமர் ராவ்**

(டில்லி)

சீனி ஊழல் விவகாரத்தில் அரசாங்க அதிகாரிகள் தவறுகள் எதையும் செய்யவில்லை. இவ்வாறு இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார். சீனி ஊழல் விவகாரம் தொடர்பாக ராவ் தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டுமென்று எதிர்க் கட்சிகள் வலியுறுத்தி வருவதும், ராவின் தலைமைக்கு காங்கிரஸ் கட்சியால் நெருக்கடி ஏற்பட்டிருப்பதும் தெரிந்ததே.

ஆனால் இவ் ஊழல் விவகாரம் குறித்து தெரிவித்துள்ள பிரதமர் ராவ் இது பாரதூரமான நட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. ஒருவார காலத்தினுள். என்ன நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி அறிவிப்பேன் எனவும், எனினும் இதில் தவறான செயல் எதுவும் இடம்பெறவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994- 12- 26

### திங்கள் இரவு

08. 01 - தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08. 20 - தாயகப் பாடல்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - தரிசனம். கலைமணி சு- வடிவேல் அவர்களுடனான செவ்வி
09. 00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள்யாவும் நிறைவுபெறும்.

### 1994. 12. 27

### செவ்வாய் காலை

07. 02 - மாவீர வணக்கம்
07. 15 - இன்றைய தாரகை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தாயகப் பாடல்கள்
08. 00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

(நியூயார்க்)

நியூயார்க் நகரில் கிறிஸ்மஸ் வாடிக்கையாளர்களால் நிறைந்திருந்த ரயிலில் குண்டொன்று வெடித்தது. இதனால் 37 பேர் காயமுற்றனர் எனவும், இவர்களில் நால்வர் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூயார்க் நகரின் வால்ஸ் ஸ்றீற் பகுதியிலுள்ள புல்டன் ஸ்ட்ரீட் ரயில் நிலையத்தில் இக் குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாகவும், ரயில் பயணி ஒருவரின் மடியிலிருந்த இக்குண்டு வெடித்ததைத்தொடர்ந்து அருகிலிருந்த பயணிகளின் உடையில் தீப்பற்றிக் கொண்டதாகவும் மேலும் கூறப்படுகிறது.

நியூயார்க் நகரில் கடந்த ஒருவாரத்தில் இடம்பெற்ற இரண்டாவது குண்டுவெடிப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

## காங்கிரஸ் கட்சியிலிருந்து திவாரி வெளியேறினார்

(டில்லி)

உத்தரப் பிரதேச சட்டப் பேரவையின் உறுப்பினரும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின்உறுப்பினரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான நாராயண தத் திவாரி நேற்று தமது பதவிகளிலிருந்து விலகுவதாக அறிவித்து இருக்கிறார்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஆட்சி நடாத்தும் முலாயம் சிங் யாதவ் தலைமையிலான அரசுக்கு காங்கிரஸ் அளித்து வரும் ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி வந்த என். டி. திவாரி அக் கோரிக்கை காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் ஏற்றுக் கொள்ளப்படாமையே தமது பதவி துறப்புக்கு காரணம் எனக் கூறியுள்ளார்.

மத்திய அமைச்சரவையிலிருந்து மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரான அர்ஜுன் சிங் பதவி துறந்ததை அடுத்து ஏற்பட்டிருக்கும் நெருக்கடி என் டி. திவாரியின் இவ் அறிவிப்பை தொடர்ந்து மேலும் அதிகரித்து இருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

காங்கிரஸ் கட்சியில் இருந்தும், காரியக் கமிட்டியில் இருந்தும் விலகிக் கொள்ளுவதாகவும், முலாயம் சிங் யாதவ் தலைமையிலான உத்தரப் பிரதேச அரசுக்கு எதிராக செயற்படப் போவதாகவும் திவாரி மேலும் கூறியுள்ளார்.

## நவசமசமாஜ கட்சிக்கு ஏழாவது ஆண்டு நிறைவு

(கொழும்பு)

நவசமசமாஜக் கட்சியின் ஏற்பாட்டில் கொழும்பு விகார மா தேவி பூங்காவில் எதிர்வரும் முப்பதாம் திகதியன்றிரவு சங்கீத இரவு கொண்டாடப்படவுள்ளது. கட்சியின் ஏழாவது ஆண்டு நிறைவு நாளைக் குறிக்கும் முகமாக இடம்பெறவுள்ள இந் நிகழ்ச்சியின் உலகவங்கியின் நிர்ப்பந்தத்தை தோற்கடித்தல், தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசை வலியுறுத்தல் என்பன தொனிப்பொருளாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்த நிறைவு நாள் நிகழ்ச்சிக்கு நவசமசமாஜக் கட்சியின் தலைவரான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தலைமை தாங்குகின்றார்.

# கருத்து சுதந்திரம் இருப்பதற்காக கூக்குரல் போடக் கூடாது

## பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

(கொழும்பு)

இந்த ஆட்சியில் மக்களுக்கு தங்கள் கருத்தை தெரிவிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதனால் எடுத்ததற்கெல்லாம் கூக்குரல் இடுகிறார்கள். இவ்வாறு கூட்டுறவு மொத்த விற்பனவு நிலைய ஊழியர்கள் மத்தியில் பேசிய பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கடந்த ஆட்சியில் மக்கள் பேசப் பயந்துகொண்டு இருந்தார்கள். அதனால், யாரும் பேசவில்லை ஆனால் இப்போது நாங்கள் அதிகார பலத்தால் மக்களை அச்சுறுத்தவில்லை. இரவில் வந்து தூக்கிக் கொண்டு செல்லவில்லை. அரசாங்க நிறுவனங்களில் இருக்கும் அதிகாரிகளில் சிலர் கடந்த கால ஆட்சியை சேர்ந்தவர்கள். அவர்களைவைத்துக்கொண்டு எமது கொள்கைப்படி காரியம் நடாத்த முடியாது எனவும் குறிப்பிட்டார்.

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

(வடமராட்சி)

சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை கோட்ட அதிபர்களுக்கு நாளை செவ்வாய் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவிருந்த முகாமைத்துவக் கருத்தரங்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதென யாழ் கல்வி வலயம் 2 கல்விப் பணிப்பாளர் திரு. க, கந்தசாமி அறிவித்துள்ளார்.

(யோ)

## ஒளிவிழா

யாழ் மாநகரசபையின் ஒளிவிழா நிகழ்ச்சிகள் எதிர்வரும் வியாழக்கிழமை மு. ப. 9.00 மணியளவில் யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.பாலசிங்கம்தலைமையில் யாழ் மாநகரசபை முன்றலில் நடைபெற உள்ளது, (17)

## தாதி

ரிடம் கேட்டிருந்ததாகவும் இதற்கு வைத்தியசாலையில் பணம் கைவசம் இல்லை என தெரிவிக்கப்பட்டதாகவும் தாதிகள் கூறுகின்றனர்.

இதைத் தொடர்ந்து தங்களுக்கு நத்தார் பண்டிகையை முன்னிட்டாவது வழங்கப்படும் என எதிர்பார்த்திருந்தனராம்.

இந்த எதிர்பார்ப்பு தங்களிற்கு பகற்கனவாக தற்பொழுது மாறியுள்ளதாக தாதி உத்தியோகத்தர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளனர். (இ)

## செஞ்சிலுவை

இவரை நீக்கியதற்கான காரணத்தைக் கேட்டதற்கு காரணம் தர மறுத்ததால் குழுதலைவர் எம். கந்தையா நீதியான காரணம் தரும் வரை தாம் கடமைக்கு திரும்புவதில்லை என தீர்மானித்து கடமைக்கு செல்லாதிருந்தார் அவரையும் வேலைக்கு அமர்த்தல்.

தொண்டர்களிற்கிடையில் ஒத்துமாறும் முறைக்கு அனுமதியளித்தல்

வைத்தியசாலையில் தங்கியுள்ள தமது உறவினர்களை பார்ப்பது தொடர்பான சொந்த அலுவலைக் கவனிக்க அனுமதிப்பது போன்ற கோரிக்கைகள் தொண்டர்களினால் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை தலைமை அலுவலகத்திடம் முன்வைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து 11-30 மணியளவில் ஸ்தலத்திற்கு விரைந்த யாழ். கிளையின் உ.பதலைவர் பாலகிருஷ்ணன், பொருளாளர் தியாகராசா ஆகியோர் தொண்டர்களின் கோரிக்கைகளை உடன் ஏற்றுக் கொண்டனர். இதைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளது.

இதையடுத்து தொண்டர்களின் சேவை வழமைக்கு திரும்பியுள்ளது. (இ)

## தீக்குச்சியில்

இரும்புக் குழலிற்குள் தீக்குச்சி மருந்தை அடைந்து வெடி செய்து கொண்டிருந்த வேளை அந்தஇரும்புகுழல்கள் வெடித்ததில் ஆர். ஜெனோ


வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தினரால் நடத்தப்பட்ட

அதிர்ஷ்டலாபச் சிட்டைகளின் விபரம்

1ஆம் பரிசு - 898 - ரூபா 10,000/-
2ஆம் பரிசு - 1659 - ரூபா 5000/-
3ஆம் பரிசு - 1077 - ரூபா 2500/-

ஆறுதல் பரிசில்கள் 50,ரூபா 200/-பெறுமதியானது

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 7905 | 2) | 87 | 03) | 7901 | 4) | 953 | 5) | 779 |
| 6) | 1159 | 7) | 602 | 8) | 3536 | 9) | 299 | 10) | 7567 |
| 11) | 5430 | 12) | 6539 | 13) | 1623 | 14) | 2043 | 15) | 1902 |
| 16) | 4222 | 17) | 3569 | 18) | 1886 | 19) | 6732 | 20) | 297 |
| 21) | 1782 | 22) | 5397 | 23) | 4047 | 24) | 2107 | 25) | 4442 |
| 26) | 2832 | 27) | 1305 | 28) | 976 | 29) | 4565 | 30) | 4605 |
| 31) | 439 | 32) | 4401 | 33) | 7656 | 34) | 7588 | 35) | 701 |
| 36) | 4316 | 37) | 5413 | 38) | 963 | 39) | 2734 | 40) | 3673 |
| 41) | 2288 | 42) | 7670 | 43) | 7559 | 44) | 7618 | 45) | 3545 |
| 46) | 7564 | 47) | 5559 | 48) | 7921 | 49) | 7907 | 50) | 252 |

இச்சிட்டைக்குரிய பணத்தை 10-1-1995 க்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும். காலம் கடந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பணத்தை பெறும் அதிர்ஷ்டசாலிகள் வரும்போது தமது சிட்டையை கொண்டுவரவும்.

இல. 8, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். செயலாளர் (சி-11013)



இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

தினசரி பி.ப 2.30க்கு மட்டும்

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவாகிய

ந. கேசவராஜனின்

பிஞ்சு மனம்


# போதையில் இருந்தவருக்கு சுத்தியலால் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வீதியால் சென்று கொண்டிருந்தவர் அவ்வழியால் வந்தவர்களின் சுத்தியல் அடிக்கு இலக்காகி தலையில் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த ரி. கமலநாதன் (வயது 38) என்பவரே காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

இச்சம்பவம் நேற்று கொக்குவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

# பயணிகளிடம் பணம்திருடிய படகோட்டி ஒருவர் கைது

(தென்மராட்சி)

கிளாலியில் படகில் பயணம் செய்த ஒருவரிடம் 65 ஆயிரம் ரூபாவை திருடினார் என்ற குற்றச்சாட்டில் படகோட்டி ஒருவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி இரவு பருத்தித்துறையைச் சேர்ந்த ச. இராமநாதன் என்பவர் கொழும்பிலிருந்து யாழ். திரும்புகையில் தவறுதலாக கிளாலியில் படகினுள் வீழ்ந்த இவரின் பணப்பையில் இருந்த பணம் பின்னர் அபகரிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இது தொடர்பாக கரையில் காவல்துறைக்கு முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து படகோட்டி கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து கரையில் மறைவாக புதைத்துவைக்கப்பட்டிருந்த பணம் மீட்கப்பட்டது.

அண்மைக் காலமாக கிளாலி கடல் பயணத்தின் போதான திருட்டுகள் அதிகரித்துள்ளதையடுத்து பளை காவல்துறையினர் கிளாலியில் தமது நடவடிக்கைகளை தீவிரமாக முடுக்கி விட்டுள்ளனர்.

## போர் நிறுத்தம்

றும் கொழும்பு வரும் பாப்பரசரை தரிசிக்க வட பகுதி மக்களின் பாதுகாப்பான போக்குவரத்திற்காக ஆனையிறவு பாதை திறக்கும் சாத்தியம் என்பன பேச்சுவார்த்தைகளில் முக்கிய இடம்பெறும். பேச்சுவார்த்தை என்ற பெயரில் முன்னைய அரசைப் போல் காலத்தை இழுத்தடிக்க நாம் விரும்பவில்லை.

பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு சுமுகமான நிலை அவசியம். இதற்கு மோதல் தவிர்ப்பு நிலை தேவை என்பதை இருதரப்பினருமே ஒப்புக் கொண்டுள்ளனர். மோதல் தவிர்ப்பு நடைமுறையின் போது புலிகளும், படையினரும் ஏற்க

கேள்வி: இப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஐ. தே. கவின் ஒத்துழைப்பு பெறப்படுமா?

பதில்: நாட்டின் இனப்பிரச்சினைக்கு நீடித்த தீர்வு காணும் விடயத்தில் அவர்களும் பங்கு கொள்ளத்தானே வேண்டும்.

கேள்வி: முதலாம் கட்ட பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட முன்னாள் வட-கிழக்கு மாகாண ஆளுநர் லயனல் பெர்னாண்டோ தொடர்பாக புலிகள் தெரிவித்துள்ள கருத்துக்கள் பற்றி விளக்கம் கோரப்பட்டுள்ளதா?

பதில்: அது போன்ற சிறு சிறு விடயங்கள் பற்றி கவனத்தில் எடுத்தால் பேச்சுக்களை தொடர முடி

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகலிங்கம் அன்னப்பிள்ளை

மீசாலை கிழக்கைச் சேர்ந்த திருமதி நாகலிங்கம் அன்னப்பிள்ளை 25-12-1994 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற சோ. கந்தையா (உதவித் தபாலதிபர், உருத்திரபுரம்), திரு. சோ. கணேசலிங்கம் (இளைப்பாறிய கொத்தணி அதிபர், கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம்), திருமதி அருணாசலம் சிவபாக்கியம், காலஞ்சென்ற யோகராசா பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி நற்குணம் கனகம்மா (உபஅதிபர், அல்லாரை அ. த. க. பாடசாலை) திருமதி இராமச்சந்திரன் மங்களேஸ்வரி (இலிகிதர், ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி), திரு. நா. பரமசிவம் (கிராம உத்தியோகத்தர், மீசாலை கிழக்கு), திருமதி நாகேந்திரராசா புவனேஸ்வரி (ஆசிரியை, வீரசிங்கம் மகாவித்தியாலயம், மீசாலை), திரு. நா. ஆனந்தசிவம் (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டிடத் திணைக்களம் - தற்போதைய 'சிவம் படமாடம்' உரிமையாளர், சாவகச்சேரி), திரு. நா. நடராசசிவம், மீசாலை, திருமதி சிவலிங்கம் இராசேஸ்வரி (உதவி வைத்திய அதிகாரி, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 26-12-94 திங்கள் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மீசாலைகிழக்கிலிருந்து வேம்பிராய் பொது மயானத்துக்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தகவல்:
நா. பரமசிவம்
(மகன்)

(10500)

## சின்னத்தம்பி பொன்னம்மா (சின்னவான்)

கந்தர்மடம், குமாரசாமி வீதி இல. 2ஐ பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி பொன்னம்மா 21-12-94 இலண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், நல்லைநாதன், தில்லைநாதன், கனகாம்பிகை (அவுஸ்ரேலியா), ஹம்சினி (இலண்டன்), பரமேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், சிவநேசமலர், மகேஸ்வரதேவி இரத்தினவேல் (அவுஸ்ரேலியா), இரவீந்திரன் (இலண்டன்), திலகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நாகதீபன், இலட்சுமணன், வதனா, ரூபன், கவிதா, சுமந்திரன் (அவுஸ்ரேலியா), உஷா, உமையாள், கார்த்திகன் (இலண்டன்) ஹனுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22-12-94 வியாழக்கிழமை இலண்டனில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. திலகநாதன்
[மருமகன்]
63 (2), குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[10501]

## நடேசபிள்ளை ஜானகி அம்மாள்

# பிஞ்சு மனம்

(வர்ண முழுநீளப்படம்)

தினசரி 4. 30, 6. 30

சனி, ஞாயிறு - 10. 30, 4. 30, 6. 30

மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுக்
கழகம் வழங்கும்

# எல்லைக்கற்கள்

(முழு நீள வர்ணப்படம்)

(சி-11014)

# தமிழீழ காவல்துறை
# பதவி வெற்றிடம்

## தட்டெழுத்து, சுருக்கெழுத்து - தமிழ்

தகைமை:- க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து உட்பட 06 பாடங்களில் சித்தி.

வயது:- 18 தொடக்கம் 30 வரை - ஆண்/பெண் இருபாலாரும்

மேற்படி தகைமையுடைய விண்ணப்பதாரிகள் 28-12-94 காலை 9.00 மணிக்கு பழைய பூங்கா நடுவப் பணியகத்திற்கு சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

(சி-11007)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

டுள்ளனர். மோதல் தவிர்ப்பு நடைமுறையின் போது புலிகளும், படையினரும் ஏற்கனவே நிலை கொண்டிருந்த இடங்களிலேயே இருப்பர் எனவும் அமைச்சர் ரத்வத்த விளக்கமளித்தார்.

அமைச்சரிடம் கேட்கப்பட்ட மேலும் சில கேள்விகளும் அவற்றிற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:

### தனித்துவமான

வுகள் தாக்கங்கள் என்பவற்றை தம்மனதில் கொண்டுள்ளனர்.

எனினும் அண்மைக்காலத்தில் நடந்த சில அசம்பாவிதங்கள், இராணுவம்-புலிகள் மோதல்கள், விடுதலைப்புலிகள் தமக்கென இராணுவ பயிற்சிக்கல்லூரிஒன்றைதமது படைப்பிரிவில் விஸ்தரித்துள்ளமை, கட்டமைப்பில் மாற்றம் செய்துள்ளமை என்பவற்றை நோக்கினால் வெகு விரைவில் புலிகள் வடக்கில் தாக்குதலை நடத்தலாம் என்பதைக் காட்டுகின்றது.

போரினால் எவரும் இலக்கை யடைய முடியாது. சோமாலியாவில் அமெரிக்க இராணுவத்திற்கு ஏற்பட்டது இதற்கு உதாரணமாகும். புலிகளின் தலைவர் பிரபாகரன் தன் போர் தந்திரங்களினாலும் தனித்துவ அணுகு முறையினாலும் எல்லாவற்றையும் சாதித்து வருகிறார். இவையாவற்றையும் நாம் கருத்திற் கொண்டால் பேச்சுகள் மூலம் எல்லாப் பிரச்சினையையும் தீர்ப்பது அனைவருக்கும் நன்மைதரும் என்றும் தராகி தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

### கரும்புலிகள்

ல்களை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் வழங்குவார்.

வலிகாமம் கோட்ட கலை, பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. க. பொழிலன் நன்றியுரை நிகழ்த்துவார், இறுதியில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

சிறு விடயங்கள் பற்றி கவனத்தில் எடுத்தால் பேச்சுக்களை தொடர முடியாது. நாம் புலிகளிடம் எந்தவிதமான விளக்கமும் கோரவில்லை.

கேள்வி: எதிர்வரும் பொங்கல் தினத்துக்கு முன்னர் மோதல் தவிர்ப்பு உடன்பாடு எட்டப்படுமா?

பதில்: காலக்கெடு ஒன்றைக் குறிப்பிட முடியாது. எனினும் கூடியவிரைவில் அமுலுக்கு கொண்டு வரலாம். ஆயினும் இது இந்த வருடத்தில் அல்ல. ஜனவரி முதல் வாரத்தில் அல்லது அதற்கு பின்னர் இடம்பெறலாம். இருப்பினும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண பேச்சுவார்த்தைகளில் இருந்து வழி தவறப் போவது இல்லை. அந்த நோக்கத்தை அடைய சகல வழிகளையும் கையாளுவோம்

### வடக்கில்

க்க வேண்டிய நடவடிக்கை என்ன?

பதில்: கடைசிவரை சமாதான தீர்வைக் காண முயற்சிக்க வேண்டும். சமாதான முயற்சி தோல்வி கண்டு யுத்த மூலம் தீர்வுகாணவேண்டியநிலை ஏற்பட்டால் அதை வடபகுதி மக்களின் ஆதரவு பெற்றே செய்ய வேண்டும். கடைசி நடவடிக்கையாகவே யுத்தம் இருக்க வேண்டும்.

கேள்வி: யுத்தம்தான் தீர்வு என்றால் அதை வடபகுதி மக்கள் ஆதரிப்பர் என நம்புகின்றீர்களா?

பதில்: வடபகுதி மக்கள் போரினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் எம்மை ஆதரிப்பர்.

கேள்வி: இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இது நல்ல சந்தர்ப்பமா?

பதில்: இதை நாம் பயன்படுத்த வேண்டும். இனவாதம் நிராகரிக்கப்பட்டு விட்டது.

கேள்வி: இனப்பிரச்சினைக்கு காணப்படும் தீர்வை தென்னிலங்கை சிங்கள மக்கள் எதிர்த்தால்?

பதில்: சிங்களவர்கள் நியாயமான தீர்வை எதிர்க்க

வேளை அந்தஇரும்புகுழல்கள் வெடித்ததில் ஆர். ஜெனோ என்பவர் கண்ணிலும்ஏனைய இருவர் கைகளிலும் படுகாயமடைந்துள்ளனர் இவர்கள் இருவரிற்கும் ஒவ்வொருவிரல் இவ்விபத்தினால் துண்டிக்கப்பட்டுள்ளது, (இ)

### ராணுவ

தேச செஞ்சிலுவை சங்கம் ஊடாக கடிதம் ஒன்றை கடந்த வியாழனன்று ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தனர்.

இராணுவ அதிகாரி பேச்சுவார்த்தை குழுவில் பங்கு பற்றுவதால் போர் நிறுத்தம் மேற்கொள்ளவும் விரோத தன்மையை நீக்கிக் கொள்ளவும் பாதுகாப்பு சம்பந்த விடயங்களை ஆராயவும் உதவியாக இருக்கும்.

பேச்சுகளுக்கு செல்லும் இக் குழுவினால் வடக்கு பிரதேச புனர் வாழ்வு புனர் நிர்மாண வேலைகள் வடக்கிற்கான பாதை திறப்பு என்பன முக்கியமாக ஆராயப்படும் என அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை புத்தாண்டில் புதிய பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் விரிவான தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதுடன் இது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் கொழும்பு தமிழ் தினசரி ஒன்று கூறுகின்றது.

அரச தரப்பினர் வடக்கு-கிழக்குப் பிர்ச்சினைக்கு நேர்த்தியான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதையே பிரதானமான நோக்கமாக கொண்டுள்ளனர் எனவும் இரு தரப்பினரும் கூடிய வரையில் தத்தமது தரப்பிலான சந்தேகங்களையும் தப்பெண்ணங்களையும் விலக்கிக்கொள்ளும் வகையிலேயே புதிய சுற்றுப் பேச்சுக்களை மேற்கொள்வார்கள் என்றும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மாட்டார்கள். யுத்த பாதிப்பை சிங்களவர்களும் உணர்ந்துள்ளனர். அவர்களும் போரை வெறுக்கின்றனர்.

## நடேசபிள்ளை ஜானகி அம்மாள்

வடலியடைப்பைச்சேர்ந்த நடேசபிள்ளை ஜானகி அம்மாள் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாதஸ்வர வித்துவான் நடேசபிள்ளையின் அன்பு மனைவியும், ஜெயராமன் (பிரபல தவில் வித்துவான்), சிங்காரவேல் (கணக்காளர்), தியாகராசா (சீமெந்து கூட்டுத்தாபனம்-காங்கேசன் துறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயலட்சுமி, புஸ்பவல்லி. கல்யாணி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி யசோதா கிருஸ்ணகோபன், (கனடா), மணிவண்ணன் (ஜேர்மனி), இராஜேஸ்வரி, சுமதி, சர்வேஸ்வரன், கிருபாகரன், சாரதா, வாசுகி (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), பாலமுரளி (பிரான்ஸ்), பாலமுருகன், சிவகுமரன், உமாதேவி, தயாபரன், சுகந்தினி, இந்துமதி ஆகியோரின் அருமைப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 26-12-94 திங்கட்கிழமை காலை பத்துமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ந. தியாகராசா
(மகன்)

பாதாள வயிரவர்கோவிலடி,
வடலியடைப்பு.

(10502)

## சிவசங்கரன் சண்முகராஜா
## (சண்முகம்)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவசங்கரன் சண்முகராஜா (சண்முகம்) அகால மரணமானார் இவர் த. சிவசங்கரன் (முன்னாள் சாறி எம்போறியம் ஊழியரும், சின்னத்துரை அன் பிறதர்ஸ் காசாளரும்), சி. இராசம்மா ஆகியோரின் புதல்வரும், சிவராஜன், கணேசராஜா (கணேசன் களஞ்சியம், திருநெல்வேலி), காலஞ்சென்ற சிவசக்தி (அரசியல் விஞ்ஞான பீட மாணவி, யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவனேஸ்வரி, பிரேமகௌரி ஆகியோரின் மைத்துனரும், தேனுசன், சதுர்சன், யதீஸ்வரன், ஆரணி ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பி. ப. 4-00 மணியளவில் அவரின் திருநெல்வேலி இல்லத்திலிருந்து கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
சி. கணேசராஜா

கணேசன் களஞ்சியம்,
(சந்தை உட்புறம்)
திருநெல்வேலி.

(10503)